*எங்கள் ரொறன்ரோ* – ரொறன்ரோ மாநகரத்தின் அதிகாரபூர்வமான வெளியீடு
மலர் 1, **இதழ்** 1, இலையுதிர் 2008

**வந்தனம்!** இது *எங்கள் ரொறன்ரோ* வெளியீட்டின் முதல் பதிப்பு.

வந்தனம்! இது *எங்கள் ரொறன்ரோ* வெளியீட்டின் முதல் பதிப்பு – ரொறன்ரோ மாநகரத்தால் மாநகர மக்களுக்காக முன்வைக்கப்படும் புதிய வெளியீடு.

மாநகர நிகழ்வுத்திட்டங்கள், சேவைகள் மற்றும் மாநகர மக்களுக்கு முக்கியமான விடயங்களில் மாநகரத்தின் நிலைப்பாடு பற்றிய விபரங்களை *எங்கள் ரொறன்ரோ* தாங்கிவரும். மாநகர நிகழ்வுத்திட்டங்களில் நீங்கள் முழுமையாகப் பங்குபற்றுவதற்கும், மாநகர சேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கும், மாநகராட்சியில் நீங்கள் பங்குபற்றுவதற்கும் வேண்டிய விபரங்களை மாநகர மக்களாகிய உங்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம். ரொறன்ரோ மாநகரம் ஈயும் சேவைகள் அனைத்தையும் நீங்கள் கண்டறியுந்தோறும் (அல்லது மீளக் கண்டறியுந்தோறும்), உங்கள் மாநகராட்சி மன்றத்துடன் நீங்கள் தொடர்புகொள்வதற்கும், உங்கள் மாநகரத்தின் வாழ்வில் மேன்மேலும் பங்குபற்றுவதற்கும் இது உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

*எங்கள் ரொறன்ரோ* வெளியீட்டை நாங்கள் அச்சிட்டு, எல்லா வீடுகளுக்கும் விநியோகித்து வருகிறோம். அத்துடன் அதனை எங்கள் இணையத்தளத்தில் (toronto.ca/ourtoronto) ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் மாத்திரமன்றி, ரொறன்ரோவில் பேசப்படும் 10 முக்கிய மொழிகளிலும் இட்டுள்ளோம். அவை சீன, தமிழ், இத்தாலிய, இஸ்பானிய, போர்த்துக்கேய, தகலொக்கு, உருது, இரஷ்ய, பார்சி, கொறிய மொழிகள் ஆகும். எங்கள் இணையத்தளத்தில், ஆங்கிலத்தில் HTML உருவிலும், ஒலிப் பதிவுருவிலும் *எங்கள் ரொறன்ரோ* வெளியீடு கிடைக்கும். கட்புலன் குன்றியோருக்கான பிரதியும் வேண்டியோர்க்கு கிடைக்கும்.

*எங்கள் ரொறன்ரோ* சுற்றாடலுக்கு உகந்த வெளியீடு என்று சொல்லிக்கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். 100 விழுக்காடு மீள்பாவனைத் தாளில், தாவர-மை கொண்டு, வன முகாமை மன்றம் வகுத்த நியமங்களின்படி *எங்கள் ரொறன்ரோ* அச்சிடப்படகிறது. தற்பொழுது மாநகரம் முன்வைக்கும் வெளியீடுகள் – *நீர் கண்காணிப்பு, கழிவு கண்காணிப்பு, மாநகர வீதிகள்* – பலவற்றுக்குப் பதிலாக *எங்கள் ரொறன்ரோ* வெளிவருகிறது. உங்கள் மாநகரம் பற்றிய விபரங்களை ஒருங்குதிரட்டி முன்வைக்கும் வெளியீடாக இது உங்கள் வாயிலை வந்தடைகிறது.

*எங்கள் ரொறன்ரோ* மலரின் இம்முதலாவது இதழை நீங்கள் முகர்ந்து மகிழ்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

**மாநகர மண்டபத்துடன் தொடர்புகொள்ளவும்**
மாநகராதிபதியுடன் அல்லது உங்கள் மாநகர மன்றாளருடன் தொடர்புகொள்வதற்கு, அழைக்கவும்: 416-338-0338. முழு மாநகர மன்றாளர் நிரலுக்கு, மாநகர இணையத் தளத்தை நாடவும்: toronto.ca

மாநகராதிபதி டேவிட் மிலர் விடுக்கும் செய்தி

எங்கள் மாநகரம், எங்கள் மாநகராட்சி மன்றம், எங்கள் மாநகர சேவை என்பவற்றைக் குறித்து நான் என்றென்றும் பெருமைப்பட்டு வந்துள்ளேன். கடந்த ஐந்து ஆண்டுகளிலும் அவற்றைக் குறித்து நான் மிகவும் பெருமைப்பட்டு வந்துள்ளேன். வளம் பெருக்கல், பெருக்கிய வளத்தை ரொறன்ரோ-வாசிகள் அனைவருடனும் பகிர்தல், வாழ்வளிக்கும் எங்கள் மாநகரக் குறிச்சிகள் அனைத்திலும் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் வாய்ப்பளித்தல் என்னும் மூன்று எளிய நெறிகளின் அடிப்படையில் 21ம் நூற்றாண்டுக்கான மாநகரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு, மாநகராட்சி மன்றம் இக்காலப்பகுதியில் ஒருமித்துச் செயற்பட்டுள்ளது.

மேற்படி இலக்குகளை எய்துவதற்கு, மாநகராட்சி மன்றம் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. எங்கள் சுற்றாடல் திட்டம் அவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு. புவி வேகல், காலநிலை மாறும் ஆபத்து என்பவற்றைத் தடுப்பதற்கு ஏதுவாக, நாங்கள் அரும்பாடுபட்டு எய்தவேண்டிய இலக்குகளையும், அதேவேளை, வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கான இலக்குகளையும் அது நிர்ணயித்துள்ளது. மாநகராதிபதியின் கோபுர புனரமைப்பு (Mayor's Tower Renewal) போன்ற திட்டங்கள் மூலம், வேலைவாய்ப்புகள் மிகவும் அதிகமாகத் தேவைப்படும் குறிச்சிகளிலேயே அவை பெரிதும் தோற்றுவிக்கப் படும்.

எங்கள் *மாநகர போக்குவரத்து* (Transit City) திட்டத்தின்படி 21ம் நூற்றாண்டுக்கான அடிப்படைக் கட்டமைப்பை மாநகரம் நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளது. Sheppard, Finch, Eglinton வீதிகள் வழியே தமது தடங்களில் ஓடும் மென் மின்பேருந்துச் சேவை மூலம் ரொறன்ரோ மாநகரக் குறிச்சிகள் அனைத்துக்கும் துரித போக்குவரத்து வசதியை இத்திட்டம் ஏற்படுத்தும்.

சமூகத்தின் பாதுகாப்பைக் குறித்து மாநகரம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிக காவல்துறையினரை நாங்கள் தெருவில் நிறுத்தியுள்ளோம். தாங்கள் பணியாற்றும் சமூகத்தவருடன் அவர்கள் கருத்தூன்றி உறவுபூண வகை செய்துள்ளோம். ஆதலால் இந்த ஆண்டிலும் குற்றம் குன்றியுள்ளது. எனினும், சமூகத்தைப் பாதுகாப்பதற்கு, வெறுமனே சட்டத்தை நிலைநாட்டுவது மட்டும் போதாது. குறிப்பாக, படுவறுமையும், பொது சேவைகள் கிடையாமையும் இளையோரைச் சண்டியர் குழும வாழ்வையும் துவக்குகளையும் நோக்கி ஈர்க்கக்கூடிய குறிச்சிகளில் மக்கள் வாழ்வை மேம்படுத்துவதற்கும் நாங்கள் பாடுபட வேண்டியுள்ளது.

தொழிலகங்கள், கல்வி நிலையங்கள், சமூக அமைப்புகள், தொழில்துறை, மற்றும் பிற அரசாங்கத் துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்தகைய 13 குறிச்சிகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் பாடுபட்டு வருகிறோம். சட்டப்படியான, சட்டவிரோதமான கைத்துவக்குகளுக்கு நாடளாவிய தடை வேண்டி நாங்கள் போராடி வருகிறோம். இத்தகைய கொலை-ஆயுதங்களுக்கும், அழிவாயுதங்களுக்கும் எங்கள் மாநகரத் தெருக்களிலோ, வேறெந்தக் கனடிய மாநகரத் தெருக்களிலோ நாங்கள் இடங் கொடுத்தலாகாது.

ரொறன்ரோ மாநகரம் பொருளாதாரத் துறையில் மேம்படுவதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை மாநகராட்சி மன்றம் அங்கீகரித்துள்ளது. தொழிலகங்களின் உடைமை வரி மற்றும் கைத்தொழில், உற்பத்தித் தொழில் துறைகளின் நீர்க் கட்டணம் என்பன குறைக்கப்பட்டுள்ளன. நல்ல வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்து, மாநகர வரியிறுப்பாளர்களின் தொகையைப் பெருக்கும் நோக்குடன் புதிய கட்டுமானங்களுக்கு நிதி-ஊக்குவிப்புகள் அங்கீகரிக்கப்பட்டள்ளன. தற்பொழுது நாங்கள் எதிர்நோக்கும்

பெருளாதார இக்கட்டுகளைக் கருத்தில் கொள்ளும்பொழுது, இந்நடவடிக்கைகள் இன்னும் முக்கியம் பெறுகின்றன.

ரொறன்ரோவில் நாங்கள் பல துறைகளில் மிகுந்த முன்னேற்றம் கண்டுவருகிறோம். ரொறன்ரோ மக்களும், மாநகராட்சி மன்றமும் உறுதிபட ஒத்துழைப்பதிலேயே அந்த முன்னேற்றம் தங்கியுள்ளது. அண்மையில் Sunrise Propane நிலையம் பயங்கரமாய் வெடித்து எரிந்ததையும், Secord Avenue–வில் உள்ள குடியிருப்புக் கட்டடத்தில் இன்னொரு சம்பவம் இடம்பெற்றதையும் அடுத்து வெளிப்பட்ட ஒத்துழைப்பை விஞ்சிய ஒத்துழைப்பு வெறு எங்குமே வெளிப்படவில்லை.

ரொறன்ரோ மக்கள் – குறிப்பாக அந்தப் பேரழிவினால் தத்தம் வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் – போற்றத்தக்க விதத்தில் நடந்துகொண்டார்கள். அவர்கள் பொறுமைகாத்து, ஒத்துழைத்து, உதவினார்கள். மக்களுக்கு இடவசதி கிடைப்பதற்கும், அவர்கள் இயன்றளவு விரைவாக வீடுதிரும்புவதற்கும் ஏதுவாக காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், நோயாளர் ஊர்திப் பணியாளர்கள் போன்ற அவசர சேவைப் பணியாளர்கள் மற்றும் மாநகர காப்பக, ஆதரிப்பு, வசிப்பிட நிருவாகத் துறையினர், ரொறன்ரோ கட்டட சேவைத் துறையினர் அனைவரும் யோர்க் பல்கலைக்கழகத்துடனும், செஞ்சிலுவைச் சங்கத்துடனும், இரட்சணிய சேனையுடனும், ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்துடனும் ஒத்துழைத்தார்கள். மக்களின் பாதுகாப்புக்கே அதிமுதன்மை அளிக்கப்பட்டது.

மாநகரத் தொழிலாளர்கள் அரும்பாடுபட்டு உழைத்தார்கள். அவசரகால திட்டம் தீட்டுவதில் நாங்கள் காட்டிய முன்மதியினாலும், ஆண்டுதோறும் நாங்கள் புரிந்த பயிற்சிகளினாலும், மெய்யாகவே ஓர் அவசர நெருக்கடி இடம்பெற்றபொழுது மாபெரும் பயன் விளைந்ததை நாம் கண்டுகொண்டோம். ஆனாலும், ரொறன்ரோவாழ் மக்கள் நிலைமையைப் புரிந்துகொண்டதையும், சிறந்த முறையில் நடந்துகொண்டதையும் குறித்தே நான் மிகவும் பெருமைப்பட்டேன். மக்களுடன் ஒழுங்காக, நெருங்கி உறவாடுவது எத்துணை முக்கியம் என்பதை அது புலப்படுத்தியது.

ரொறன்ரோவாழ் சமூகங்களுக்கும், மக்களுக்கும் முக்கியமான விடயங்கள் குறித்து அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் எங்கள் மரபினை இவ்வெளியீடு முன்னெடுத்துச் செல்கிறது. 21ம் நூற்றாண்டுக்குரிய மகத்தான மாநகரம் ஒன்றை – வளங்கொழித்து, அனைவருக்கும் வாய்ப்பளித்து, வாழ்வளிக்கும் மாநகரம் ஒன்றை எங்களால் நிர்மாணிக்க முடியும். ரொறன்ரோவாழ் மக்களும், தொழிலகங்களும், மாநகராட்சி மன்றமும் தம்மிடையே கருத்தூன்றி மெய்யாக ஒத்துழைத்தால் மாத்திரமே அது கைகூடும்.

அந்த ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முயற்சியில் *எங்கள் ரொறன்ரோ* முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மகத்தான மாநகரத்தை நாங்கள் ஒருங்கிணைந்து நிர்மாணிக்குந்தோறும் இவ்வெளியீட்டில் முன்வைக்கப்படும் விபரங்கள் உங்கள் நாட்டத்தை ஈர்க்கும் என்றும், உங்களுக்கு அது நலம் பயக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

## ரொறன்ரோ கொடியின் கதை

நீலப் பின்புலத்தில் வெள்ளை வரிகள், மாநகர மண்டபம் அமைந்துள்ள கோபுரங்களைக் குறிப்பவை. கோபுரங்களின் அடிமட்டத்தில் உள்ள மேப்பிள் இலை மன்றக் கூடத்தைக் குறிப்பது. ரொறன்ரோ மாநகரம் 1997ல் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர், புதுக்கி அமைக்கப்பட்ட அம்மாநகரத்தைக் குறிப்பதற்குப் புதிய கொடி ஒன்றை மாநகராட்சி மன்றம் நாடியது. அதற்கான வடிவமைப்புகளை முன்வைக்கும்படி பொதுமக்கள் கேட்கப்பட்டார்கள். தமது உத்தேசங்களை முன்வைக்கும்படி மாநகர வடிவமைப்புப் பணியாளர்கள் கேட்கப்பட்டார்கள். அப்புறம் அவை மீள்நோக்கப்பட்டன. 1974ல் முந்திய ரொறன்ரோ மாநகரக் கொடியை வடிவமைத்த Renato De Santis சிறிய மாற்றங்களுடன் தனது வடிவமைப்பை முன்வைத்தார். 1999ல் மாநகராட்சி மன்றம் அந்த வடிவமைப்பை அங்கீகரித்தது.

## கைத்துவக்குகளைத் தடைசெய்யக் கோருவது தொடர்பான புதிய விபரம்

கைத்துவக்குகளைத் தடைசெய்யக் கோரி மாநகராதிபதி டேவிட் மிலர் முன்னெடுக்கும் இயக்கத்துக்கு ஆதரவு பெருகி வருகிறது. அதனைக் குறித்து பிரதம அமைச்சர் ஸ்டீபன் ஹார்ப்பர் அவர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பத்தில் 65,000க்கு மேற்பட்டோர் ஒப்பமிட்டுள்ளார்கள். மாநகரம் எங்கும் வாழும் மக்களின் உள்ளங்களில் எதிரொலிக்கும் இவ்விண்ணப்பத்துக்கு கனடிய, அமெரிக்க நாடுகள் எங்கும் வாழும் சமூகங்களின் ஆதரவும் கிட்டியுள்ளது. சமூகத்தைக் காக்க அரும்பாடுபடும் இம்மாநகரம் அதன் தெருக்களில் மேலதிகமாக 400 காவல்துறையினரை நிறுத்தியுள்ளது. சண்டியர் குழும-துவக்குத் தடுப்பு அணி வெற்றிகரமாக இயங்கி வருகிறது. மத்திய, மாகாண அரசுகளுடன் அது ஒத்துழைத்து வருகிறது. துவக்குகளைப் பயன்படுத்தும் குற்றுவாளிகளுக்கு மிகவும் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்றும், எல்லைப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் அது வாதாடி வருகிறது.

“நீண்ட காலத்துக்கு முன்னரே கைத்துவக்குகள் தடைசெய்யப்பட்டிருக்க வேண்டும். அதில் எவ்வளவுக்குத் தாமதம் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு மக்கள் இறப்பார்கள் அல்லது காயப்படுவார்கள். கைத்துவக்குகளைப் பயன்படுத்துவதற்கு ஒரேயொரு நோக்கமே உண்டு: மக்களைக் கொல்வதே அந்த ஒரேயொரு நோக்கம். கனடாவில் கிடைக்கும் கைத் துவக்குகளுக்குப் பெருவாரியானோர் பலியாகியுள்ளார்கள். கனடாவில் அவற்றுக்கு இடங் கொடுத்தலாகாது” என்று மாநகராதிபதி மிலர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் துவக்குகளைப் பயன்படுத்தும் குற்றத்தைத் தடுப்பதற்கு மிகவும் கடுமையான சட்டம் இயற்றப்பட வேண்டும். சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு துவக்குகள் கடத்தப்படுவதை நிறுத்துவதற்கு எல்லைப் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். கனடாவில் துவக்குப் பாவனை மேலும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு தடுப்பு நிகழ்வுத்திட்டங்களும், இளையோர்க்கு வாய்ப்பளிக்கும் நிகழ்வுத்திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும் என்றெல்லாம் மாநகராதிபதி வேண்டிக்கொண்டுள்ளார்.

*றொறன்ரோ துவக்கு வன்முறை தடுப்புத் திட்டம் தொடர்பான புதிய விபரம்* (*Update on Toronto Gun Violence Strategy*) பங்குனி மாதம் நிறைவேற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. துவக்கினைப் பயன்படுத்தி ஒருவர் கொல்லப்படும் அல்லது காயப்படுத்தப்படும் அல்லது அச்சுறுத்தப்படும் ஒவ்வொரு தடவையும் பாதிக்கப்படும் குடும்பங்கள் விபரிக்கமுடியாத துயரத்துக்கு உள்ளாகின்றன. சமூகங்கள் உறுதிகுலைகின்றன. எங்கள் தொழிலகங்களின் விருத்தி தடைப்படுகின்றது. சமூகத்தை ஆளும் அமைப்புகள்மீது மக்கள் கொண்ட நம்பிக்கை சரிகிறது என்றெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவில் சட்டவிரோதமான முறையில் கிடைக்கும் சுடுபடைக்கலங்களுள் பெரும்பாலானவை அமெரிக்காவிலிருந்து கடத்திவரப்பட்டவை என்றும், கனடாவில் திருடப்பட்டவை என்றும் மேற்படி புதிய விபரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளது.

கனடாவில் கைத்துவக்குகளைத் தடைசெய்யும் இயக்கத்துக்கும் நாட்டுக்குள் துவக்குகள் கடத்திவரப்படுவதைத் தடுப்பதற்கு எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தும் இயக்கத்துக்கும் தலைமை வகிக்கும்படி பிரதம அமைச்சர் ஹார்ப்பர் அவர்களிடம் றொறன்ரோ காவல்துறை சேவைச் சபையின் (Toronto Police Services Board) தலைவர் அலோக் முக்கர்ஜி (Alok Mukherjee) அவர்களும் கேட்டுக்கொண்டுள்ளார்: “கைத்துவக்குகளைத் தடைசெய்யும் இயக்கத்துக்குத் தலைமை வகிப்பதன் மூலம் மக்களின் பத்திரத்தையும் பாதுகாப்பையும் பேணுவதற்குத் தாம் பூண்ட உறுதியை பிரதம அமைச்சர் ஹார்ப்பர் புலப்படுத்த முடியும்.”

toronto.ca/handgunban

**மாநகர போக்குவரத்து**
**ரொறன்ரோவின் மூலைமுடுக்கெல்லாம் உள்ளடங்கும் திட்டம்**

இது அரும்பாடுபட்டு எய்தவேண்டிய ஒரு துணிகரமான விரிவாக்கத் திட்டம். மக்களுக்கான போக்குவரத்து வசதியை மாநகரத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஏற்படுத்தும் திட்டம். இதன்படி ஒரு புதிய மென் துரித போக்குவரத்துக் கட்டுக்கோப்பை அமைப்பதற்கும், அதற்கு வேண்டிய ஊர்திகளைப் பெற்றுக்கொள்வதற்கும் $800 கோடி ($8 billion) செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுதோறும் 17.5 கோடி (175 million) பேர் விரைந்து பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கு வழி பிறக்கும் என்று கணிப்பிடப்பட்டள்ளது.

ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்தின் *ரொறன்ரோ போக்குவரத்து மாநகரம் - மென் துரித போக்குவரத்து* ("மாநகர போக்குவரத்து") *Toronto Transit City – Light Rapid Transit Plan* ("Transit City") திட்டத்தின்படி, தனியே துரித மின்பேருந்துப் போக்குவரத்துக்கென 120 கிலோமீட்டர் நீளமான தடங்கள் அமைக்கப்படும். "மாநகர போக்குவரத்து" எனப்படும் இத்திட்டம் 2007 பங்குனி மாதம் புகுத்தப்பட்டது. ஆனி மாதம் அதனை மாகாண அரசு அங்கீகரித்தது. மாகாண அரசின் *ஒன்ராறியோ நகர்வு 2020* (*Move Ontario 2020*) என்னும் போக்குவரத்துத் திட்டத்தில் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. *மெற்றோலிங்சும்* (Metrolinx), அகண்ட ரொறன்ரோ போக்குவரத்து அதிகாரசபையும் (Greater Toronto Transportation Authority) இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளன.

"உயர்தர மென் துரித போக்குவரத்து வசதியை ரொறன்ரோ மாநகரின் மூலைமுடுக்கெல்லாம் ஏற்படுத்துவதற்காகவே *மாநகர போக்குவரத்து* என்னும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 2021ல் இத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் 120 கிலோமீட்டர் நீளமான 7 தடங்களைக் கொண்ட மின்பேருந்துக் கட்டுக்கோப்பின் மூலம் 17.5 கோடி பேர் பயணம் செய்ய வழி பிறக்கும். அவர்களுள் 10 கோடிப் பேர் புதிய பயணிகளாக விளங்குவார்கள்" என்று ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் Adam Giambrone கூறுகிறார்.

*மாநகர போக்குவரத்து* திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 7 வேலைத்திட்டங்களுள் Sheppard East, Etobicoke-Finch West and Eglinton–நகர்கடப்பு மென் துரித போக்கு வரத்துத் தடங்கள் 3க்குமான எந்திரவியல், வடிவமைப்புப் பணிகளை ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் கடந்த ஆண்டு இறுதியில் அங்கீகரித்தது. இம்மூன்றும் முதலில் தொடக்கப்படவேண்டிய தடங்கள் என்று முடிவுசெய்யப்பட்டது.

Sheppard East வேலைத்திட்டம் தொடர்பான சூழல் கணிப்பீட்டுப் பணியில் ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. Sheppard Avenue East வழியே Don Mills பகுதியிலிருந்து ரொறன்ரோவின் வடகிழக்கே உள்ள Meadowvale Road வரை செல்லும் மென் துரித போக்குவரத்து தடத்துக்கு மிகவும் உசிதமான வடிவமைப்பு ஒன்றை அது விதந்துரைத்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தின் *ஒன்ராறியோ நகர்வு 2020* திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு 12 ஆண்டுகளுள் எல்லாத் தடங்களையும் அமைத்து முடிப்பதற்கு இவ்வேலைத் திட்டங்களுள் ஒன்று 2009ல் தொடக்கப்பட வேண்டும்.

“காலநிலை மாற்றத்தையும், புவி வேகலையும் தடுப்பதில் ரொறன்ரோ மாநகரம் உலகில் முன்னின்று செயற்படும். துரித, பாதுகாப்பான மென் மின்பேருந்துப் போக்குவரத்துத் தடங்களை அமைத்து, கார்களை விடுத்து சூழலுக்கு உகந்த பொது போக்குவரத்து வசதியை நாடும்படி மக்களைத் தூண்டுவதே எங்கள் அடிப்படை நோக்கம்” என்று கூறுகிறார் மாநகராதிபதி டேவிட் மிலர்.

புதிய மென் துரித போக்குவரத்துத் தடங்களின் கட்டுக்கோப்பு என்பது வெறுமனே மின்பேருந்துகளைத் தெருக்களில் செலுத்திவிடுவதுடன் நின்றுவிடாது. இது ஒரு புதிய கட்டுக்கோப்பு மாத்திரமல்ல, ரொறன்ரோவுக்கு முற்றிலும் வேறுபட்ட கட்டுக்கோப்பு – இவை தமக்கே உரிய தடங்களில் செல்லும், புதிய தாழ்மட்ட ஊர்திகள்

மத்திய, மாகாண, மாநகர ஆட்சிபீடங்கள் மூன்றும் வழங்கும் நிதியுதவியிலேயே இக்கட்டுக்கோப்பு முழுவதும் தங்கியுள்ளது. “ஒரு சுரங்கத் தொடருந்து மார்க்கத்துக்கு ஆகும் செலவைக்கொண்டு மூன்று மென் மின்பேருந்துத் தடங்களை அமைக்க முடியும்” என்று Giambrone கூறுகிறார். ஆதலால்தான் ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் மென் துரித போக்குவரத்தை முன்வைத்துள்ளது.

“*மாநகர போக்குவரத்து* என்னும் திட்டத்தை மேற்படி பகுதிகளில் விரிவுபடுத்துவதற்கு மென் துரித போக்குவரத்து முறையே தகுந்தது. இத்தடங்கள் அமைக்கப்படுவதால் எங்கள் முதன்மைவாய்ந்த தெருக்கள் சிலவற்றின் வடிவமைப்பு மேம்படும். மக்கள் அடர்ந்து வாழும் குறிச்சிகளுக்குரிய நெறிகளின்படி கட்டுமானம் இடம்பெறுவதை அது ஊக்குவிக்கும். போக்கவரத்துச் சேவையில் வேகத்தையும் பாதுகாப்பையும் அது பெருக்கும்” என்று பொது இடவெளி விடயங்களில் அக்கறை கொண்ட *Spacing* என்னும் உள்ளூர் சஞ்சிகையின் வெளியீட்டாளர் Matthew Blackett கூறுகிறார்.

“ரொறன்ரோவில் மக்கள் பயணம்செய்யும் விதத்தை இது முற்றிலும் மாற்றியமைக்கும். சூழலைப் பேணும் விருத்தியாக விளங்கும். காலநிலை மாற்றத்தை தடுப்பதில் மாநகரத்துக்கு உதவும். பட்டணப் போக்குவரத்தில் முன்னிற்கும் மாநகரம் என்னும் சிறப்பை ரொறன்ரோ மீண்டும் எய்துவதற்கு வழிவகுக்கும்” என்று ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்தின் சேவைத் திட்ட முகாமையாளர் Mitch Stambler கூறுகிறார்.

ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்தினால் தயாரிக்கப்பட்ட விரிவான பயணக் கணிப்பீடுகளின்படி, தமது தடம்வழியே செல்லும் மின்பேருந்துப் போக்குவரத்துக் கட்டுக்கோப்புக்கு 300க்கு மேற்பட்ட மென் துரித போக்குவரத்து ஊர்திகள் தேவைப்படும். ஏற்கெனவே பயன்படுத்தப்படும் மின்பேருந்துகளை மாற்றுவதற்கு எத்தகைய மின்பேருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோ, அத்தகைய மின்பேருந்துகளாகவே இவை அமையும்.

**ttc.ca**

இத்திட்டத்தின்படி மேற்படி மென் துரித போக்குவரத்து 7 உத்தேச மார்க்கங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைக்கும் அதேவேளை, தற்போதைய சுரங்கத் தொடருந்து மார்க்கங்களையும், தரைப்புற மார்க்கங்களையும், எதிர்காலத்தில் ஸ்படைனாவிலிருந்து யோர்க் பிராந்தியம் வரை நீடிக்கப்படவுள்ள சுரங்கத் தொடருந்து மார்க்கத்தையும் ஒருங்கிணைக்கும். GO போக்குவரத்துச் சேவையையும், 905 போக்குவரத்துச் சேவைகளையும் இத்துடன் இணைக்கும் உத்தேசமும் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த

வகையில் அகண்ட ரொறன்ரோ பிராந்தியம் முழுவதும் தங்குதடையற்ற போக்குவரத்துக் கட்டுக்கோப்பினுள் அடங்குவதற்கும் இது அடிகோலும்.

இத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மென் தண்டவாள மார்க்கங்கள் பின்வருமாறு:

• Sheppard East: Don Mills Station முதல் Meadowvale Road வரை.
• Don Mills: Steeles Avenue முதல் Bloor-Danforth Subway வரை.
• Eglinton Crosstown: Kennedy Station முதல் Toronto Pearson International Airport வரை.
• Etobicoke-Finch West: Finch Station முதல் Hwy. 27 வரை.
• Jane: Jane Station முதல் எதிர்கால Steeles West Station வரை.
• Scarborough Malvern: Kennedy Station முதல் Malvern/Morningside பகுதி வரை.
• Waterfront West: Union Station/Exhibition முதல் Long Branch வரை.

## கழிவுப்பொருள் கலங்கள் மீண்டும் சுரங்கத் தொடருந்து நிலைய மேடைகளில்

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கழிவுப்பொருள், மீள்பாவனைப்பொருள் கலங்கள் மீண்டும் சுரங்கத் தொடருந்து நிலைய மேடைகளுக்கு வந்துள்ளன.

யூன் மாதம் 28 சுரங்கத் தொடருந்து நிலையங்களில் 300க்கு மேற்பட்ட கலங்கள் மீண்டும் இடப்பட்டன. இந்த ஆண்டு கழிவதற்குள் 69 சுரங்கத் தொடருந்து - ஸ்காபறோ துரித போக்குவரத்து நிலைய மேடைகளிலும் கழிவுப்பொருள் கலங்கள் மீண்டும் இடப்படும்.

குறிப்பாக காலையில் அவசர பயணவேளை கழிந்த பின்னர் 28 நிலையங்களும் பெரிதும் துப்புரவாக இருப்பதைத் தாங்கள் அவதானித்துள்ளதாக ரொறன்ரோ போக்குவரத்து ஆணைய பேணல் பணியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

கஞ்சல்களையும் இன்னுரைப்பானப் பேணிகள், போத்தில்கள், செய்தித்தாள்கள் போன்ற மீள்பாவனைப் பொருட்களையும் இடுவதற்காகவே உலோக, கண்ணாடி-பிளாஸ்திக் கலங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நிலையங்களைத் துப்புரவாக வைத்திருப்பதற்கு மேற்படி மேடைக் கலங்கள் உதவும். அத்துடன் தொடருந்துகள் விரைந்து நகர்வதற்கும் உதவும். காற்றில் எற்றுண்டு தொடருந்துத் தடங்களைச் சென்றடையும் தாள்வகைகளில் தீப்பற்றும் வாய்ப்புண்டு. அதனால் மக்களின் பாதுகாப்புக்கு கெடுதியும், பயண சேவையில் தாமதமும் ஏற்படக்கூடும்.

900க்கு மேற்பட்ட கலங்களை போக்குவரத்து நிலையங்களில் இடுவது, 2010ம் ஆண்டுக்கு முன்னர் 80 விழுக்காட்டளவு கழிவுவகைகளை கழிவுப்புலத்திலிருந்து திசை திருப்புவது தொடர்பாகப் போக்குவரத்துத் துறை குறித்த இலக்கை எய்துவதற்கு உதவும்.

## அவசர நிலைமைகளுக்கு மாநகரம் விரைந்து ஈடுகொடுத்து எடுத்து வருகிறது

மூன்று வார காலப்பகுதிக்குள் இம்மாநகரம் இரண்டு பாரிய நெருக்கடிகளுக்கு ஈடுகொடுத்தது – 2008 யூலை 20ம் திகதி Secord Avenue-வில் உள்ள ஒரு குடியிருப்புக் கட்டடத்தில் ஒரு வெடிப்பு நிகழ்ந்து தீப்பற்றியது. இரண்டாவதாக, 2008 ஆகஸ்ட் 10ம் திகதி ஒரு வெடிப்பு நிகழ்ந்து தீப்பற்றியது. இரண்டு தடவைகளும், அந்த விபத்துகளை அடுத்து, நாட்கணக்காக, கிழமைக் கணக்காக, இக்கட்டான வேளைகளில், மாநகரம் விரைந்து நடவடிக்கை எடுத்து, நிவாரண சேவையகங்களை அணிதிரட்டி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்க வழிவகுத்தது.

மாநகராட்சி மன்றத்தின் பகுதிகள், முகமையகங்கள், சபைகள், ஆணையகங்கள் பலவும் ஒருங்கிணைந்து, ஒத்துழைத்து, உடனடியாகவே பதில் நடவடிக்கை எடுத்தன.

மாநகராட்சி மன்றம் ஆண்டு முழுவதும் அவசர நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கப் பழகி, தயார்நிலையில் உள்ளது. ஓர் அவசர நிலைமை ஏற்படும்பொழுது நிவாரண அமைப்புகளை அணிதிரட்டுவதற்கு ஓர் அவசர திட்டத்தை அது வகுத்துள்ளது. அவசர நிலைமை ஒவ்வொன்றும் தனித்துவமானது. வெவ்வேறு அவசர நிலைமைகளுக்கு வெவ்வேறு பதில் நடவடிக்கைகளும், வேவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு நிவாரண நடவடிக்கைகளும் தேவைப்படும். அண்மையில் ஏற்பட்ட அவசர நிலைமைகள் இரண்டுக்கும் மாநகரம் ஈடுகொடுத்த விதங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

இரண்டு வெடிப்பு விபத்துகளும் நிகழ்ந்த கையோடு மக்களை வெளியேற்றும் நிலையம் ஒன்றை மாநகரம் திறந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் அங்கே இன்றியமையாத தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், தற்காலிக காப்பகம், உணவு, உளநல மதியுரை உட்பட தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. 2 Secord Avenue-விலிருந்து இடம்பெயர்ந்த ஏறத்தாழ 900 குடிமக்களை உள்வாங்கிய வெளியேற்ற நிலையம், அவர்கள் 6 கிழமைகள் கழித்து தமது வசிப்பிடங்களுக்கு மீளும்வரை திறந்திருந்தது. Murray Road-ல் நிகழ்ந்த வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்ட குடிமக்களை உள்வாங்கிய வெளியேற்ற நிலையம், அந்த விபத்தை அடுத்து நான்கு நாட்களுக்க மாத்திரமே திறந்திருக்க நேர்ந்தது.

Murray Road-ல் நிகழ்ந்த வெடிவிபத்தினால், 1.6 கிலோமீட்டர் பரப்பளவுக்குள்ளிருந்து 10,000க்கு மேற்பட்ட குடிமக்களையும் தொழிலகங்களையும் வெளியேற்ற நேர்ந்தது – அவர்களுள் அநேகர் இரண்டு நாட்களுக்குள் தத்தம் வீடுகளுக்கும் தொழிலகங்களுக்கும் திரும்ப முடிந்தது. மாநகரம் மேற்கொண்ட பதில் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, என்றுமே இல்லாவாறு விபத்து மையத்தின் அயலைத் துப்புரவாக்கும் பணியில் அது ஈடுபட்டது.

இவ்விரு சந்தர்ப்பங்களிலும் மாநகரத்தால் துரிதமாகப் பதில் நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கும் வேண்டிய உதவிகளை இயைபுபடுத்தி வழங்க முடிந்தது. இரண்டொரு கிழமைகளுக்குள் இம்மாநகரத்தால் இரண்டு பாரிய நெருக்கடிககளுக்கு ஈடுகொடுக்க முடிந்தது. அவசர நிலைமைகளுக்கு ஈடுகொடுப்பதற்கு மாநகரம் தயாராக உள்ளதை இது மேலும் வெளிப்படுத்துகிறது.

ஓர் அவசர நிலைமையின்பொழுது விரைந்து பதில் நடவடிக்கை எடுத்து, மக்களுக்குத் துணைநிற்க இம்மாநகரம் தயாராக இருக்கிறது. அதேவேளை மட்டுப்பட்ட அளவிலேயே மாநகரத்தால் அவர்களுக்கு உதவ முடியும். வீட்டு உடைமையாளர் அல்லது குடியிருப்பாளர் எவரும் செய்யக்கூடிய மிகமுக்கியமான அலுவல்களுள் ஒன்றை இங்கே குறிப்பிடலாம்: தீவிபத்து அல்லது வேறு நெருக்கடி குறித்து அவர்கள் போதியளவு

காப்புறுதி செய்திருக்க வேண்டும். தமது காப்புறுதி நியதிகளை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களுக்கு கனடா காப்புறுதிப் பணியகத்தின் இணையத்தளத்தை நாடவும்: www.ibc.ca.

## மாநகரவாசிகள் வகிக்கும் பங்கு

அவசர நிலைமையை எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் - செவ்வைபார்ப்பு நிரல்

- ஓர் அவசர நிலைமையை எதிர்கொள்வதற்கான திட்டத்தை வகுத்து, அதற்கு முன்னரும், அதன்பொழுதும், அதன் பின்னரும் செய்யவேண்டிய அலுவல்களை உங்கள் குடும்பத்தவர் அறிந்திருக்கும்படி பார்க்கவும்.
- வழங்கீட்டுத் தாபனங்கள், பாலர் பராமரிப்பகம், நெடுங்கால பராமரிப்பு நிலையங்கள், பாடசாலை, வேலைத்தலம், காப்புறுதி நிறுவனம் உட்பட அவசரசேவை அமைப்புகளின் தொலைபேசி இலக்கங்களைக் கைவசம் வைத்திருக்கவும்.
- வீட்டிலிருந்து தப்பி வெளியேறும் திட்டம் ஒன்றை வகுத்து, ஆண்டுதோறும் குடும்பத்தவர்களுடன் பரீட்சிக்கவும்.
- முதலுதவிப் பொருட்கள், மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள், உணவு, நீர், மாற்றுடை, முக்கிய ஆவணங்களின் பிரதிகள் கொண்ட அவசர குடும்ப உதவிப் பெட்டி ஒன்றை ஆயத்தமாக வைத்திருக்கவும்.
- பின்வரும் இணையத்தளத்தில் மாநகரம் முன்வைத்துள்ள சுய தயார்நிலை வழிகாட்டியின் பிரதியைப் பெற்றுக்கொள்ளவும்:

**toronto.ca/oem**

## உங்கள் வீட்டினுள் மழைநீர் சுவறாது பாதுகாத்தல்

தனிவீட்டு, இருகூட்டக, முக்கூட்டக உடைமையாளர்கள் தமது கீழ்த்தளங்களுள் மழைநீர் சுவறாது பார்ப்பதற்கு உதவுமுகமாக இம்மாநகரம் அவர்களுக்கு நிதியுதவியும் மதியுரையும் நல்கி வருகிறது.

கீழ்த்தளத்துள் மழைநீர் சுவறாது பாதுகாப்பதற்கு நிதியுதவிபுரியும் நிகழ்வுத்திட்டத்தின்படி, ஒரு தேங்குநீர் ஊடிதழை (backwater valve) அல்லது தேங்குநீர் பாய்ச்சியை (sump pump) அல்லது இரண்டையும் வாங்கிப் பொருத்துவதற்காகும் செலவு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட உச்சவரம்புத் தொகையில் 80 விழுக்காடு வரை இம்மாநகரம் நிதியுதவி புரிந்து வருகிறது. மழைநீரக் கழிகால் குழாய் இணைப்பை (storm sewer connection) துண்டித்து, மூடுவதற்கும் அது நிதியுதவி புரிந்து வருகிறது. ஒரு வளவுக்கு ஆகும் செலவில் ஈடுசெய்யப்படும் உச்சத் தொகை: $3,200. வீட்டு உடைமையாளர்கள், மேற்படி நிதியுதவி எதனையும் பெற்றுக்கொள்ளும் தகுதியை அடைவதற்கு, தமது வளவிலுள்ள குத்துக்குழாய்களை, கழிகால் கட்டுக்கோப்பிலிருந்து துண்டிக்க முடியுமிடத்து துண்டிக்க வேண்டும். அத்துடன் ரொறன்ரோ-உரிமம் கொண்ட ஒரு குழாயாளரைக் கொண்டு தமது வளவைக் கணிப்பிடுவித்து, அங்கு மழைநீர் தேங்குவதைத் தடுப்பதற்குத் தேவைப்படுவது அல்லது இயலக்கூடியது என்ன என்பதை நிச்சயிக்க வேண்டும்.

கழிகால் கட்டுக்கோப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளையும், கீழ்த்தளங்களுள் மழைநீர் சுவறுவதைத் தணிப்பதற்கு உதவும் நடவடிக்கைகளையும் மாநகரம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதேவேளை, வீட்டு உடைமையாளர்கள் செய்யக்கூடிய அலுவல்களும் உள்ளன:

- குத்துக்குழாய்களை (downspouts) கழிகால் கட்டுக்கோப்பிலிருந்து துண்டித்தல், மழைநீரை கீழ்த்தளச் சுவருக்கு அப்பால் பாயச் செய்தல்.
- சுவர், அடிப்பரப்பு, சாளரம், அத்திவாரம், துளைக்குழாய் (weeping tile) வகைககளில் கசிவுகள் உள்ளனவா என்று செவ்வைபார்க்கவும், பழுதுபார்க்கவும்.
- மழைநீர் தரையில் சுவறுவதற்கு ஏதுவாக மென்-புற தரையமைப்பைக் கருத்தில் கொள்ளவும்.
- கழிவுக்குழாய் வழியே எண்ணெய்க் கழிவுகளை ஊற்றவோ, கழிகலத்தினுள் பொருள் வகைகளை இட்டுப் பாய்ச்சவோ கூடாது.

**toronto.ca/water**
**416-395-6376**

**கீழ்த்தளத்தினுள் மழைநீர் சுவறினால், முதல் நடவடிக்கையாக ரொறன்ரோ நீர்ப்பணித் துறையை அழைக்கவும்: 416-338-8888. மாநகரப் பணியாளர்கள் உங்கள் வளவைப் பார்வையிட்டு, பிரச்சனையின் தோற்றுவாயைக் கண்டறிவார்கள்.**
**அது மாநகரத்தின் பிரச்சனை என்றால், மாநகரமே அதனைத் தீர்த்துவைக்கும்.**
**அது வீட்டு உடைமையாளரின் பொறுப்பு என்றால், அதற்குச் சிறந்த தீர்வு என்ன என்பது குறித்து மாநகரப் பணியாளர்கள் மதியுரை கூறுவார்கள்.**

## நீர் வழங்கலை மேம்படுத்தல்

ரொறன்ரோ மாநகரம் தொடர்ந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நீர் வழங்கி, கழிவுநீர் அகற்றி வந்துள்ளது. உண்மையில், எங்கள் தரையில் தாழ்த்திய குழாய்களுள் 80 விழுக்காட்டுக்கு மேற்பட்டவை 50 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவற்றுள் சில ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டவை! அவற்றை மாற்றவேண்டிய காலம் இது – இந்நீர்க் குழாய்க் கட்டுக்கோப்பை மேம்படுத்துவதற்கான நிதி, நேரடியாகவே நீர்க் கட்டண அதிகரிப்பின் மூலம் ஈட்டப்படுகிறது. அண்மையில் அதிகரிக்கப்பட்ட கட்டணம், மாநகரத்தின் நாட்பட்ட நீர்க்குழாய்க் கட்டுக்கோப்பினைச் செம்மைப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. மூலநீர்க்குழாய் உடைவுகள் குறைவதற்கும், தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மாநகர வாசிகளுக்குத் தரமுயர்ந்த நீர் தொடர்ந்து கிடைப்பதற்கும் இம்முதலீடு வழிவகுக்கும்.

2008ம் ஆண்டு முடிவதற்குள் Lakeshore Boulevard West வழியே Lower Spadina Avenue முதல் York Street வரை புதிய மூலநீர்க்குழாய்களை மாநகரம் அமைத்து முடிக்கும். மேற்படி குறிச்சியில் உள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கும் தொழிலகங்களுக்கும் நீர் வழங்கலை இந்த அமைப்புத்திட்டம் மேம்படுத்தும். இதற்கு $13 இலட்சம் ($1.3 million) செலவாகும். மாநகரம் எங்கும் இடம்பெறும் கீழ்க்கட்டுமானப் புனரமைப்புகள் பலவற்றுள் இது ஒன்று மட்டுமே. வேறு முக்கிய வேலைத்திட்டங்கள் பின்வருமாறு:

- அடுத்த 9 ஆண்டுகளுள் மாநகரத்தின் மூலநீர்க்குழாய் விநியோகக் கட்டுக் கோப்பிலிருந்து ஈயக் குழாய்கள் அனைத்தையும் அகற்றுவதற்கான நிகழ்வுத்திட்டம் - ஈய நீர்க்குழாய் மாற்றும் இந்நிகழ்வுத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு $2.5 கோடி ($25 million) செலவாகும். ரொறன்ரோ மாநகர குழாய் நீர் தொடர்ந்து தரமுயர்ந்து நிலைப்பதற்கு இம்முக்கிய திட்டம் ஏதுவாகும்.
- நோர்த் யோர்க், ஸ்காபறோ, எற்றொபிக்கோ முழுவதும் 14 வட்டாரங்களில் வீட்டுக் கீழ்த்தளங்களில் மழைநீர் சுவறும் காரணங்களையும், அதன் விளைவுகளையும் நிச்சயித்து, தீர்வு காண்பதற்கு $30 இலட்சம் ($3 million) செலவில் சூழல்-கணிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- தெற்கு எற்றொபிக்கோ, ஹம்பர் கழிவுநீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் (Humber Wastewater Treatment Plant) எழும் நெடியை உடன் தணிப்பதற்கு உதவும் நோக்குடன் அங்குள்ள நாட்பட்ட உபகரணங்களை மாற்றுதல். எதிர்வரும் இலையுதிர் பருவத்தில் தொடங்கி, 2012ல் நிறைவேற நிர்ணயித்த இவ்வேலைத்திட்டத்துக்கு $2.3 கோடி ($23 million) செலவாகும்.
- ஸ்காபறோ, ஹோர்கன் நீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை (Horgan Water Treatment Plant in Scarborough) விரிவாக்கல், ஒன்ராறியோ ஏரியில் வளரும் பாசிவகைகளால் நாங்கள் பயன்படுத்தும் நீரின் சுவையும் மணமும் அவ்வப்பொழுது கெடுவதைக் கட்டுப்படுத்த உதவும் நோக்குடன் ஓசோன் வாயு வசதிகளை ஏற்படுத்தல். கோடையின் பிற்கூறில் நீரின் சுவையும் மணமும் கெடுவது வாடிக்கை. யோர்க் பிராந்தியத்துடன் செலவுபகிர்ந்து மேற்கொள்ளப்படவுள்ள இந்த ஐந்தாண்டு வேலைத்திட்டத்தால் இந்தப் பிரச்சனை தணியும். இதற்கு $19 கோடி ($190 million) செலவாகும். 2009 முற்கூறில் வேலை தொடங்கும்.

**toronto.ca/water**

**ரொறன்ரோ மாநகரத்தை வலுப்படுத்தி நிர்மாணித்தல்**
அனைவருக்கும் வாழ்வு, வளம், வாய்ப்பு.

*வளங்கொழிப்பு நிகழ்வுத்திட்டம்: ஒரு மகத்தான மாநகரத்துக்கான திட்டவிளக்கம்* (*Agenda for Prosperity: A Prospectus for a Great City*) 2008 தை மாதம் மாநகராட்சி மன்றத்தால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரொறன்ரோ வாசிகள் அனைவரும் வளங்கொழித்து வாழ்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் வகுக்கப்பட்ட ஒரு துணிகரமான நடவடிக்கைத் திட்டம் இது. ரொறன்ரோவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வழிவகைகள் குறித்து மாநகராட்சி மன்றத்துக்கு மதியுரை நல்குவதற்கென, மாநகராதிபதியின் பொருளாதார மேம்பாட்டு மதியுரைக் குழு (Mayor's Economic Competitiveness Advisory Committee) – தொழிலகத் துறை, தொழில் துறை, கல்வித் துறை என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட முன்னணியினரைக் கொண்ட குழு – 2006ல் அமைக்கப்பட்டது. அவர்களுடைய ஒத்துழைப்பின் பெறுபேறே: *வளங்கொழிப்பு நிகழ்வுத்திட்டம்.*

எங்கள் மாநகரத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் புலனைச் செலுத்தியே இந்த அறிக்கையை அவர்கள் முன்வைத்துள்ளார்கள். ரொறன்ரோவில் வசிப்பிடமின்மை, வறுமை, வறியோருக்கும் செல்வந்தருக்கும் இடையே அதிகரிக்கும் ஏற்றத்தாழ்வு என்பன பொருளாதார, சமூகப் பிரச்சனைகளாக விளங்குகின்றன. தனியாட்களும், குடும்பங்களும், சமூகங்களும் நலமுடன் வாழ்வதற்கு நல்ல வேலைவாய்ப்புகளைப் பேணிக்கொள்ளவும், ஈர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

"பொருளாதார நன்னிலை எய்தாமலேயே வளங்கொழிக்கலாம் என்று நாங்கள் கனவிலும் கருத முடியாது என்னும் இன்றைய உலக உண்மையை ஊன்றிப் புலப்படுத்தும் கருத்துகளை வடிகட்டியே *வளங்கொழிப்பு நிகழ்வுத்திட்டம்* வகுக்கப்பட்டுள்ளது. நாடுகளும் நகரங்களும் தமது பொருளாதார வலைகளை தத்தம் எல்லைகளுக்கு அப்பால் பரக்கத் தொலைக்க வீசி, அனைத்துநாட்டுச் சந்தையில் போட்டியிட வேண்டும். ரொறன்ரோ வாசிகள் அனைவருக்கும் தரமுயர்ந்த வாழ்வு கிடைப்பதற்கு ஏதுவாக அவர்களை பொருளாதார, பண்பாட்டு சமூகத் தொடுப்பு மையங்களுடன் *வளங்கொழிப்பு நிகழ்வுத்திட்டம்* தொடர்புபடுத்துகிறது" என்று மாநகராதிபதியின் பொருளாதார மேம்பாட்டு மதியுரைக் குழு (Mayor's Economic Competitiveness Advisory Committee) உறுப்பினரும், ICICI Bank Canada-வின் தலைவரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான Hari Panday தெரிவித்துள்ளார்.

*வளங்கொழிப்பு நிகழ்வுத்திட்டத்துக்குத்* துணைநிற்கும் பணிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. *ஆக்கவள மாநகர திட்டமிடல் கட்டுக்கோப்பும்* (*Creative City Planning Framework*) தொழிலக–வணிக–சுற்றுலா–சமூக–பண்பாட்டு உறவுகளை மேம்படுத்து வதற்காக மாநகராதிபதி டேவிட் மிலர் சீனா சென்றமையும் அவற்றுள் அடங்கும். இணைய வாயிலாகத் தொழிலக அனுமதிப் பத்திரங்களையும் உரிமங்களையும் நாடும் முறைமை (BizPaL) இந்த ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்டது. தொழிலதிபர் எவரும் ரொறன்ரோவில் ஒரு தொழிலகத்தை எளிதில் திறந்து, நடத்துவதற்கு ஏதுவாக இம்மாநகரம் மத்திய, மாகாண அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறது.

**toronto.ca/prosperity**
**toronto.ca/culture/creativecity2008**

## பாதுகாப்பான மாநகரத்தை மிகவும் பாதுகாப்பான மாநகரமாக்கல்

வெறுமனே வன்முறை இடம்பெறாத நிலைமையை மாத்திரம் கொண்டு சமூகத்தின் பாதுகாப்பை எய்த முடியாது. அனைவரும், குறிப்பாக பாதிப்புறவல்ல சமூகங்களில் வாழும் இளையோர், கண்ணியத்துடனும் மதிப்புடனும் நடத்தப்பட வேண்டும். தமது இயல்திறன் முழுவதையும் எய்தும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். சமூகமும் நலமுடன் வாழவேண்டும்.

ரொன்ரோவின் சமூக பாதுகாப்புத் திட்டம் 2004ல் தொடக்கப்பட்டது. இம்மாநகரம் எங்கும் முதன்மைவாய்ந்த குறிச்சிகளை அது தொடர்ந்து உருமாற்றி வருகிறது. வன்முறையை, குறிப்பாக துவக்குடன் கூடிய வன்முறையைத் தணித்து, சமூக நன்னிலைக்கு உதவும் அலுவல்களில் துணைநிற்கும் முயற்சிகளுக்கு இத்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. திட்டவட்டமான சமூக விருத்தித் திட்டங்களையும், உதவிகளையும் நாடிய 13 முதன்மைவாய்ந்த குறிச்சிகளை 2005ல் மாநகரமும் United Way-அமைப்பும் கண்டறிந்தன. "எவரும் பின்தங்காது, அனைவரும் நல்வாழ்வு வாழ வாய்ப்பளிக்கும் மாநகரத்தை உருவாக்குவதே எமது குறிக்கோள். எங்கள் சமூகங்களில் காணப்படும் நிலைமைகளை மாற்றியமைத்து, அனைவருக்கும் பாதுகாப்பு மிகுந்த, வலுமிகுந்த மாநகரத்தை நிர்மாணிப்பதற்கு நாங்கள் ரொறன்ரோ மாநகரத்துடன் சேர்ந்து பாடுபட்டு வருகிறோம்" என்று United Way தலைவர் Frances Lankin தெரிவித்துள்ளார்.

**toronto.ca/community-safety**

## குறிச்சி நடவடிக்கை

இளையோரைப் பயிற்றல், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், அவர்களைப் பொறுப்புகளில் ஈடுபடுத்தல், அவர்களுக்கு நீதி கிடைக்கத் துணைநிற்றல், சமூகமும் குடும்பமும் அவர்களுக்குத் துணைநிற்க வழிவகுத்தல், அவர்களுக்குப் பல்வேறு சேவைகளும் கிடைக்கும் வாய்ப்புகளை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு முதன்மை கொடுத்து மேற்கொள்ளப்படும் சேவைகளை இயைபுபடுத்தி, வளங்களைப் பயன்படுத்தும் நோக்குடன், முதன்மை வாய்ந்த 13 குறிச்சிகளில் குறிச்சி நடவடிக்கை அணிகளும், (Neighbourhood Action Teams), குறிச்சி நடவடிக்கைக் கூட்டமைப்புகளும் (Neighbourhood Action Partnerships) உருவாக்கப்பட்டுள்ளன. 2006 முதல்:

- இளையோர் வேலைவாய்ப்பு, கல்வி, தேர்ச்சி விருத்தி விடயங்களில் $1.5 கோடி ($15 million) முதலீடு செய்யப்பட்டதன் பெறுபேறாக, இளையோர்க்கு 30,000க்கு மேற்பட்ட வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
- இளையோரைப் பொறுப்புகளில் ஈடுபடுத்தும் விடயத்தில் கிட்டத்தட்ட $2.4 கோடி ($24 million) முதலீடு செய்யப்பட்டு, 247,000 இளையோர் வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.
- சமூகமும், குடும்பமும் இளையோர்க்குத் துணைநிற்கும் விடயத்தில் பருமட்டாக $2.5 கோடி ($25 million) முதலீடு செய்யப்பட்டு, 41,000 இளையோர், குடும்ப வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.
- மாநகராதிபதியின் கூட்டமைப்பு வாய்ப்பு ஈகை நிதியத்தின் (Mayor's Partnership Opportunities Legacy Fund) மூலம் எங்கள் மாநகரமும், கூட்டமைப்புத் தரப்புகளும் முதன்மை வாய்ந்த குறிச்சிகள் அனைத்திலும் புதிய சமூக இடவெளிகளையும், போழுதுபோக்கு வசதிகளையும் தோற்றுவித்து வருகின்றன.

**இளையோர் வேலைவாய்ப்பு**

- தொழிலமைப்புகள், இளையோர்க்கு வேலைவாய்ப்பு அளித்து, வைத்திருப்பதை மேம்படுத்துவதற்கு வேண்டிய வாய்ப்பு வளங்களை தொழிலமைப்பு துணை–வேலை வாய்ப்புத் திட்டம் (Employer Access to Support) வழங்கி வருகிறது.
- முன்கூட்டியே பரீட்சிக்கப்பட்டவர்களாகவும், தேவையான பயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்தவர்களாகவும் விளங்கும் இளையோரைக் கொண்டு தொடக்கநிலைப் பதவிகளை நிரப்புவதில் வேலைவாய்ப்பு முன்னகர்வுக் கூட்டமைப்பு (Partnership to Advance Youth Employment) தொழிலகங்களுக்கு உதவி வருகிறது.
- ஜேம்ஸ்டவுண்-றெக்ஸ்டேல் முதன்மைக் குறிச்சியைச் சேர்ந்த இளையோர், இலவசமாக அதிநவீன மின்மக் கலை பயில்வதற்கு ProTech Media Centre வாய்ப்பளித்து வருகிறது.

**இளையோர் ஈடுபாடு**

- *இளையோர் ஈடுபாடு* (Involve Youth) என்பது முதன்மைக் குறிச்சிகளில் இளையோரிடையே தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கு உதவும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அவர்களைச் சமூக அலுவல்களில் ஈடுபடுத்துவதற்குமான நிகழ்வுத்திட்டம் ஆகும்.
- இளையோர் தமது தலைமைத்துவத்தை விருத்திசெய்வதற்கும், வேலைவாய்ப்புக்குத் தயாராகுவதற்கும், சமூகத்துக்குத் தொண்டாற்றுவதற்கும் பொழுதுபோக்கு நிகழ்வுத் திட்டங்கள் வாய்ப்பளித்து வருகின்றன. கடந்த ஆண்டு வரவேற்புக் கொள்கைக்கமைய (Welcome Policy) வருமானம் குறைந்த 30,000 பேரிடம் நிகழ்வுத்திட்டப் பயனாளர் கட்டணம் அறவிடப்படவில்லை.
- 6 முதல் 12 வரை வயது கொண்ட சிறாருக்குரிய பாடசாலை வேளைக்குப் பிந்திய பாதுகாப்பான, தரமான, புதுமையான பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்களை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு, பாடசாலை வேளைக்குப் பிந்திய பொழுதுபோக்குப் பராமரிப்பு) (After-School Recreation Care) நிகழ்வுத்திட்டம் வழங்கி வருகிறது. 2008ல் இந்நிகழ்வுத் திட்டத்தின் கீழ் மேலதிகமாக 11 இடங்கள் கொண்டுவரப்பட்டன. தற்பொழுது இமாநகரம் எங்கும் மொத்தமாக 30 இடங்களில் பதிவுசெய்யப்பட்ட 885 சிறுவர்களுக்கு 90 இளையோர் பணியாற்றி வருகிறார்கள்.
- வன்செயல்களையும், அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளையும் எதிர்கொண்டு, மீட்சி காண்பதில் சமூக நெருக்கடி பதில்வினை நிகழ்வுத்திட்டம் (Community Crisis Response Program) ரொறன்ரோ எங்கும் வாழும் சமூகங்களுக்கு வாய்ப்பு வளங்களையும் உதவிகளையும் இயைபுபடுத்தி வழங்கிவருகிறது.
- ரொறன்ரோ விளையாட்டுத் தலைமைத்துவ நிகழ்வுத்திட்டம் (Toronto Sport Leadership Program)

2007ல் இம்முன்னெடுப்பின் மூலம் 13 முதன்மைக் குறிச்சிகளையும் சேர்ந்த இளையோர் 100 பேர் பயிற்றல், தலைமைத்துவம் என்பவற்றில் சான்றிதழ் பெற்றார்கள்.

**சமூக பாதுகாப்பு செயலகம்**

பாதுகாப்பான மாநகரத்தை மிகவும் பாதுகாப்பான மாநகரமாக மாற்றுவதற்கான மாநகராதிபதியின் மதியுகைக் குழாம் (Mayor’s Advisory Panel on Making a Safe City Safer) ஆற்றும் பணிக்கும், மாநகராட்சி மன்றத்துக்கும் சமூக பாதுகாப்பு செயலகம் (Community Safety Secretariat) துணைநிற்கிறது. முற்றுமுழுதான சமூக பாதுகாப்புத் திட்டத்தின் (Community Safety Plan) கூறுகளை அது இயைபுபடுத்தியது. அதன் முன்னெடுப்புகளுள் பின்வருவன அடங்கும்:

- அனைவரையும் உள்வாங்கி, மிகுந்த பாதுகாப்பளித்து, வலுமிகுந்த மாநகரமாக ரொறன்ரோவை மாற்றுவதில் சமயத் துறை வகிக்கும் பங்கு தொடர்பான சிறந்த வழமைகளைப் பகிர்வதற்காகவும், வழிமுறைகளை விதந்துரைப்பதற்காகவும் ரொறன்ரோ பிராந்திய சர்வசமய மன்றம் (Toronto Area Interfaith Council) அமைக்கப்பட்டது.
- மாநகரக் குறிச்சிகளில் காவல்துறையினர் - இளையோர் உறவை மேம்படுத்துவதில் சட்டத் துறை வகிக்கும் பங்கினை ஆராய்வதற்காக இளையோர் உறவுக் குழுக்கள் (Youth Liaison Committees) அமைக்கப்பட்டன.

நீர்முன்றல்

நீங்கள் இப்பொழுது இம்மாநகர நீர்முன்றலை நோட்டமிட்டு, ஒருசில ஆண்டுகள் கழித்து, அதனை மீண்டும் நோட்டமிட்டு, ‘முந்திய’ காட்சியையும், ‘பிந்திய’ காட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். எத்தகைய மாற்றங்கள் புலப்படும்? ஆம், புத்தம்புதுமையின் அறிகுறிகள் புலப்படும்! இது இந்தப் பிராந்தியத்துக்கெனத் திட்டமிடப்பட்டுள்ள குறிச்சிகள் பற்றிய கட்டுரை. ரொறன்ரோ நீர்முன்றல் பற்றிய கட்டுரைக் கோவையில் இது முதலாவது.

**டான் மேற்குப் புலம் (West Don Lands)**
அன்று கைத்தொழிற் பகுதியாக விளங்கி, இன்று பாவனை குறைந்த பகுதியாக விளங்கும் டான் மேற்குப் புலம் ஒரு புதிய போக்கிடமாக மாறி வருகிறது.

கடந்த வசந்தகாலத்தில் வெள்ளம் தடுக்கும் மண்மேடு (Flood Protection Landform) ஒன்றை அமைக்கும் பணி தொடங்கியது. இது மேற்கே யோர்க் வீதி வரை நீண்டு, ரொறன்ரோ மாநகர நிதிய மாவட்டத்தை உள்ளடக்கும் பிராந்தியத்தை வெள்ள ஆபத்திலிருந்து பாதுகாக்கும் மண்மேடு. ஒன்ராறியோ ஆதனக் கூட்டுத்தாபனத்துடன் (Ontario Realty Corporation) கூட்டுச்சேர்ந்து அமைக்கப்படும் இந்த மண்மேடு வருங்காலத்தில் டான் ஆற்றுக் கோட்டமாக (Don River Park), 18 ஏக்கர் பரந்த கோட்டமாக, (டண்டாஸ் சதுக்கத்தைவிட ஏறத்தாழ 20 மடங்கு பெரிய கோட்டமாக), விளங்கும். அத்துடன் டான் மேற்குப் புலத்துச் சமூகத்தின் தனிச்சிறப்பாகவும் அது விளங்கும். இந்தப் பிராந்தியத்தில் 4 வெவ்வேறு குறிச்சிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது – அனைத்தும் டான் ஆற்றுக் கோட்டத்தை மையப்படுத்தியே அமையும்.

2009 முற்கூறில் டான் மேற்குப் புலத்தில் மாவட்ட வலுவள நிலையத்தை அமைக்கும் பணி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2010ம் ஆண்டுக்கு முன்னர், அமைக்கப்படும் முதல் தொகுதிக் கட்டடங்களுக்கு அது வெப்பவலுவையும், குளிர்வலுவையும் வழங்கத் தொடங்கும். இஸ்கந்திநேவியாவிலும், பிற ஐரோப்பிய தேசங்களிலும் மாவட்ட வலுவள நிலையங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. வட அமெரிக்க நகரங்களில் இனிமேல்தான் அவை பரவலாக அமைக்கப்பட வேண்டும்.

ரொறன்ரோ நீர்முன்றல் துறை (Waterfront Toronto) வசிப்பிட கட்டுமானத்தை மேற்கொள்வதற்கு முதலாவது நிர்மாண நிறுவனத்தை தெரிவுசெய்துள்ளது. கட்டுமானம் 2009ல் தொடங்கும்.

**கிழக்கு பே-முன்றல் (East Bayfront)**
ரொறன்ரோ நீர்முன்றலின் கிழக்கு பே-முன்றல் பகுதி ஜார்விஸ் வீதியில் தொடங்கி, கிழக்கே பார்லிமென்ற் வீதி வரை நீள்கிறது. கிழக்கு பே-முன்றலில் உள்ள பொது நிலத்தை ரொறன்ரோ நீர்முன்றல் துறை 3 குறிச்சிகளாகப் பிரித்துள்ளது: பேசைட் (Bayside), டாக்சைட் (Dockside), பார்க்சைட் (Parkside).

ஷேபோர்ண், பார்லிமென்ற் வீதிகளுக்கிடையே 13 ஏக்கர் பரபப்பளவு கொண்ட காணியில் பேசைட் அமைந்துள்ளது. ஜார்விஸ், ஷேபோர்ண் வீதிகளுக்கிடையே 11 ஏக்கர் பரபப்பளவு கொண்ட காணியில் அமைந்துள்ள டாக்சைட் ஒரு பல-பயன்பாட்டுக் குறிச்சியாக விளங்கும். அவற்றைவிடச் சிறிய பார்க்சைட் பகுதியில் முக்கியமாக வசிப்பிட கட்டடங்களை அமைப்பதற்கே திட்டமிடப்பட்டுள்ளது.

“4 ஆண்டுகள் திட்டம் தீட்டிய பின்னர், கிழக்கு பே-முன்றல் திட்டத்தைச் செயற்படுத்தும் கட்டத்தை நாங்கள் அடைந்துவிட்டோம். தற்பொழுது மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் பலவும் எங்களைப் பூரிக்க வைக்கின்றன. புதிய கட்டுமானத்துக்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பை ரொறன்ரோ நீர்முன்றல் துறை ஆரம்பித்துள்ளது,” என்று மாநகர நீர்முன்றல் செயலகத்து நீர்முன்றல் வேலைத்திட்டப் பணிப்பாளர் Elaine Baxter-Trahair குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது நீர்முன்றல் இடத்தை (First Waterfront Place) ரொறன்ரோ பொருளாதார விருத்திக் கூட்டுத்தாபனம் (Toronto Economic Development Corporation) அமைக்கத் தொடங்கியுள்ளது. அங்கே Corus Entertainment Inc. செயற்படும். அத்துடன், ஜோர்ஜ் பிறவுண் கல்லூரியின் புதிய சுகாதாரவியல் வளாகத்தையும், மாணவர் வசிப்பிடத்தையும் பே-சைட் பகுதியில் அமைக்கும் திட்டத்தை ரொறன்ரோ நீர்முன்றல் துறை அண்மையில் அறிவித்தது. அந்த உத்தேசத்தை மாநகரப் பணியாளர்கள் தற்பொழுது ஆராய்ந்து வருகிறார்கள். எதிர்வரும் இலையுதிர் பருவத்தில் தமது எண்ணங்களை அவர்கள் மாநகராட்சி மன்றத்திடம் விதந்துரைப்பார்கள்.

ஜார்விஸ் கோட்டம், ஷேபோர்ண் கோட்டம் ஆகிய இரு புதிய கோட்டங்களும் இந்தப் பகுதியில் மையம் கொள்ளும். இரண்டும் 2010ல் பூர்த்தி செய்யப்படும்.

‘‘நீர்முன்றலை அமைத்து முடிப்பதற்கு நீண்ட காலம் செல்லும். எனினும் சம்பந்தப்பட்ட பகுதியில் அடுத்தடுத்து இடம்பெறவுள்ள மாற்றங்களை ரொறன்ரோ வாசிகள் தற்பொழுது கண்டறியலாம். அதாவது, இந்த மாநகரத்துக்கு மாபெரும் சொத்தாக விளங்கப்போகும் குறிச்சி ஒன்றையே நாங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறோம்’’ என்று ரொறன்ரோ நீர்முன்றல் துறைக்கு உட்பட்ட கிழக்கு பே-முன்றலின் துணைத் தலைவர் Andrew Gray தெரிவித்துள்ளார்.

**waterfrontoronto.ca**
**toronto.ca/waterfront**

**மாநகர வாசிகள் அனைவரின் பங்களிப்பிலுமே மாநகரம் தங்கியுள்ளது**

**சமூகம் கொள்ளும் ஈடுபாடு = தகவல்+கலந்துரையாடல்+தீர்மானம்+நடவடிக்கை**

மாநகராட்சி மன்றமே மக்களை மிகவும் எட்டிய ஆட்சி மன்றம் என்று பெரிதும் கொள்ளப்படுகிறது. காலையில் நீங்கள் காப்பி தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் நீர் முதல், மாலையில் நீங்கள் வீடுதிரும்பும் வேளையில் உங்களுக்குத் துணைநிற்கும் மின்விளக்குகள், பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்கள், கோட்டங்கள், பாலர் பராமரிப்பு, நூலகங்கள், அவசர சேவைகள், தெருக்கள், நடைபாதைகள் வரை அனைத்துக்கும் நீங்கள் மாநகரத்தையே நம்பியிருக்கிறீர்கள். அந்த வகையில், இந்த மாநகரம் உங்கள் வாழ்வில் ஓர் அங்கம் என்க.

(pull quote)

**When you vote, consult, comment, debate – or talk to the Mayor or your Councillor – you are keeping local government relevant.**

**நீங்கள் வாக்களிக்கும்பொழுது அல்லது கலந்துசாவும்பொழுது அல்லது கருத்துரைக்கும் பொழுது அல்லது விவாதிக்கும்பொழுது – மாநகராதிபதியுடன் அல்லது உங்கள் மன்றாளருடன் கதைக்கும்பொழுது உங்கள் மாநகராட்சி மன்றத்துக்கு நீங்கள் அருகதை சேர்க்கிறீர்கள்.**

மாநகராட்சியில் நீங்கள் தலையாய பங்கு வகிக்கிறீர்கள். ரொறன்ரோ மாநகர பொருளாதாரத்தையும், சமூகத்தையும், சூழலையும் நன்னிலைப்படுத்துவதற்கு ஏதுவான நெறிமுறைகளை நிர்ணயிப்பதற்கும், நிகழ்வுத்திட்டங்களையும் சேவைகளையும் மேற்கொள்வதற்கும், புதுமைகளை ஊக்குவிப்பதற்கும் உங்கள் கருத்துக்களும் கரிசனைகளும் உதவுகின்றன. நீங்கள் வாக்களிக்கும்பொழுது அல்லது கலந்துரையாடல்களில் பங்குபற்றும்பொழுது அல்லது மாநகர நடவடிக்கை அணியில் பங்கேற்கும்பொழுது அல்லது கட்டுமான விண்ணப்பங்கள் குறித்து கருத்துரைக்கும் பொழுது அல்லது மாநகராதிபதியுடனோ உங்கள் மாநகர மன்றாளருடனோ உரையாடும்பொழுது அல்லது உங்கள் நண்பர்களுடனும், அயலவர்களுடனும், குடும்பத்தவர்களுடனும் மாநகர விடயங்கள் குறித்து விவாதிக்கும்பொழுது உங்கள் மாநகராட்சி மன்றத்துக்கு அருகதை சேர்க்கும் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடுவோர் ஆகிறீர்கள்.

மாநகரவாசிகள் மாநகர விடயங்களில் ஈடுபட்டு, மாநகர விடயங்களையும், அவற்றைக் குறித்து மாநகராட்சி மன்றம் மேற்கொள்ளும் முடிபுகளையும் இலகுவில் கற்றறிவதற்கு மாநகராட்சி மன்றம் உதவுகிறது. மாநகராட்சி மன்றத்திலும், குழுக்களிலும் ஆராயப்படும் விடயங்கள் பற்றிய புதிய புதிய விபரங்களை மாநகரத்தின் புதிய இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட Meeting Monitor (http://app.toronto.ca/tmmismonitor/index.do) உடனுக்குடன் வழங்கி வருகிறது. மாநகரத்தின் புதிய ரொறன்ரோ பசுமை வாழ்வு நிகழ்வுத்திட்டமும் (Live Green Toronto), ரொறன்ரோ தாது-எரிய நுகர்வு ஒழிப்புத் திட்டமும் (ZeroFootprint Toronto) சூழல் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய நடைமுறை சார்ந்த விபரங்களை உங்களுக்குத் தரவல்லவையாக விளங்குகின்றன.

மாநகர சேவைகள், நிகழ்வுத்திட்டங்கள், மாநகராதிபதியுடனும், உங்கள் உள்ளூர் மன்றாளருடனும் தொடர்புகொள்ளல் என்பன தொடர்பாக நீங்கள் எழுப்பக்கூடிய வினாக்களுக்கு ரொறன்ரோ தகவல் இணைப்பகத்தால் (Access Toronto) விடையளிக்க முடியும் (416-338-0338). மாநகரவாசிகளுடன் கலந்துசாவல், மாநகர நியமனங்கள், விசேட

நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் மாநகரத்தின் ‘பங்குபற்றவும்’ (‘Get Involved’) இணையத்தளத்தில் காணப்படுகின்றன (www.toronto.ca/involved). 2010 நவம்பர் 8ம் திகதி நடைபெறவுள்ள அடுத்த மாநகராட்சித் தேர்தலில் பங்குபற்றுமாறும் ரொறன்ரோ வாசிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேர்தல் பற்றிய விபரங்கள் 2010 தை மாதம் முதல் மாநகர இணையத்தளத்தில் இடம்பெறும்.

**எவ்வாறு நாங்கள் உதவலாம்?**

ஊர்திப் போக்குவரத்து சைகைச் சாதன உடைவுகள்
416-397-8723

தெருச் சைகைச் சாதன உடைவுகள்/காணாமல் போதல்
416-397-8723

ஒப்பனை மின்விளக்குகள்
உங்கள் உள்ளூர் தொழிலக மேம்பாட்டுப் பகுதியுடன் (BIA) தொடர்புகொள்ளவும்*

பேருந்து தரிப்புக்கூட சேதங்கள்
1-866-827-8725

தொலைபேசிக் கூண்டு உடைவுகள்
6-1-1

அகற்றப்படவேண்டிய A-சைகைச் சட்டங்கள்/கையடக்கச் சைகைகள்
மாநகர உரிம-நியமக் கூட்டை (ML&S box) பார்க்கவும்

தொங்கும் கூடைகள்
உங்கள் உள்ளூர் தொழிலக மேம்பாட்டுப் பகுதியுடன் (BIA) தொடர்புகொள்ளவும்*

வீதி/நடைபாதை பழுதுபார்ப்புகள்
வீதி துப்புரவாக்கல்
416-338-9999

தீயணைப்பு நீர்க் குழாயிலிருந்து நீர் கசிதல்
416-338-8888

கேலிவரைபடம்
416-338-0338

தெரு மின்விளக்கு பழுதுபார்ப்பு
416-542-3195

தெரு-பதாகை
உங்கள் உள்ளூர் தொழிலக மேம்பாட்டுப் பகுதியுடன் (BIA) தொடர்புகொள்ளவும்*

அஞ்சல் பெட்டி பழுதுபார்ப்பு
1-800-267-1177

ஊர்திக் கட்டணமானி பழுதுபார்ப்பு
416-393-7275

செய்தித்தாள் பெட்டி பழுதுபார்ப்பு
416-338-9999

தெருவில்/நடைபாதையில் குப்பை/குப்பை கொள்கலம் நிரம்பி வழிதல்
416-338-0338

புதிய உந்துருளி நிலைகளுக்கான வேண்டுகோள், சேதமடைந்த உந்துருளி நிலைகள்/ கைவிடப்பட்ட உந்துருளிகள் பற்றி அறிவித்தல்
416-392-9253

மூலநீர்க்குழாய் சரிப்படுத்தல்
416-338-8888

மீள்பாவனைப்பொருள் கொள்கல சேதம்
416-259-3200

உள்ளூர் மாநகர உரிம-நியம அலுவலகத்துடன் தொடர்புகொள்ளல்:
- நோர்த் யோர்க் மாவட்டம்: 416-395-7011
- ரொறன்ரோ - ஈஸ்ட் யோர்க் மாவட்டம்: 416-397-9200
- ஸ்காபறோ மாவட்டம்: 416-396-7071
- எற்றோபிக்கோ யோர்க் மாவட்டம்: 416-394-2535

பின்வருவனவற்றை அறிவிப்பதற்கு:
- A-சைகைச் சட்டம்/கையடக்க சைகைகள்
- கைவிடப்பட்ட உபரகரணங்கள்
- பொதுவாகப் பழுதடைந்த அல்லது கெடுதி விளைவிக்கும் நிலையிலுள்ள பொருட்கள்

www.toronto.ca
accesstoronto@toronto.ca
416-338-0338

Toronto Association of Business Improvement Areas
Business Improvement Areas (BIA)
www.toronto-bia.com
416-889-4111

**எவ்வாறு நாங்கள் உதவலாம்?**

நீர் வரத்து குறைவு
416-338-8888

நீர் வரவில்லை
416-338-8888

நீர் நாற்றம்/நெடி
416-392-2894

கழிவுக்குழாய் அடைப்பு
416-338-8888

ஒரு பொருளை பச்சைக் கொள்கலத்திலா, நீலக் கொள்கலத்திலா, குப்பை கொள்கலத்திலா இடுவது?
416-392-2467

கழிவுப்பொருள் அகற்றல் நாட்காட்டி தேவை
416-338-2010

(பெரிய உபகரணங்களை) அகற்றும் விசேட சேவை
416-338-2010

தெருவில் பனி வாரப்படவில்லை/உப்பு இடப்படவில்லை
416-338-9999

பெரிய உருப்படி அகற்றப்படல்
416-338-2010

(தனியார் வளவிலிருந்து) குப்பை, துண்டு - துணுக்குகள் அகற்றல்
மாநகர உரிம-நியமக் கூட்டை (ML&S box) பார்க்கவும்

கெடுதி விளைவிக்கும் வீட்டுக் கழிவுப்பொருள் அகற்றல்
416-392-4330

நடைபாதை பழுதுபார்ப்பு
416-338-9999

உள்ளூர் மாநகர உரிம-நியம அலுவலகத்துடன் தொடர்புகொள்ளல்:
- நோர்த் யோர்க் மாவட்டம்: 416-395-7011
- ரொறன்ரோ - ஈஸ்ட் யோர்க் மாவட்டம்: 416-397-9200
- ஸ்காபறோ மாவட்டம்: 416-396-7071
- எற்றோபிக்கோ யோர்க் மாவட்டம்: 416-394-2535

பின்வருவனவற்றை அறிவிப்பதற்கு:

- குப்பை, துண்டு துணுக்குகள்
- கைவிடப்பட்ட உபரகரணங்கள்
- பொதுவாகப் பழுதடைந்த அல்லது கெடுதி விளைவிக்கும் நிலையிலுள்ள பொருட்கள்

www.toronto.ca
accesstoronto@toronto.ca
416-338-0338

## எங்கள் கழிவுப்பொருள் அலுவலில் அக்கறை எடுத்தல்

2010ம் ஆண்டுக்கு முன்னர் கழிவுப்பொருட்களுள் 70 விழுக்காட்டை தாழ்த்தல்புலத்திலிருந்து திசைதிருப்புவதற்கு மாநகரம் பூண்ட உறுதியில் அது கருத்தூன்றிச் செயற்படுகிறது. அந்த இலக்கு70ஐ எய்துவதற்கான திட்டத்தை அது வகுத்துள்ளது. கழிவுப் பொருட்கள் மீள்பாவனைக்கு இடப்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், பழைய நீல, சாம்பல் நிறப் பெட்டிகளுக்குப் பதிலாக, புதிய, பெரிய நீலக் கொள்கலங்களைப் பயன்படுத்தல், மாநகரவாசிகளுக்கு புதிய குப்பை கொள்கலங்களை வழங்குதல், ஒவ்வொரு வளவும் முன்வைக்கும் குப்பையின் அளவைப் பொறுத்து, திண்மக் கழிவு கையாள்கைக் கட்டணம் விதித்தல் என்பன இத்திட்டத்துள் அடங்கும். தற்போதைய, புதிய திசைதிருப்பல் நிகழ்வுத்திட்டங்களுக்கு இக்கட்டணம் பயன்படுத்தப்படும். மாநகரவாசிகள் கழிவுப்பொருட்களை மிகவும் குறைப்பதற்கும், மறுபடி பயன்படுத்துவதற்கும், மீள்பாவனைக்கு இடுவதற்கும் இது வழிவகுக்கும்.

இதுவரை கிடைத்த பெறுபேறுகள் எங்களுக்குத் தெம்பூட்டுகின்றன. புதிய நீலக் கொள்கலங்களை ஒருசில மாதங்கள் மட்டுமே பயன்படுத்திய மாநகரவாசிகள், தாம் மீள்பாவனைக்கு இடும் கழிவுப்பொருட்களின் தொகையை ஏற்கெனவே 10, 15 விழுக்காட்டினால் பெருக்கியுள்ளார்கள். குப்பைகொள் கலங்கள் கிழக்கிலிருந்து மேற்கு வரை இம்மாநகரம் எங்கும் உருண்டோடுகின்றன.

கடந்த காலத்தில் குப்பை கையாள்வதற்கான சராசரிக் கட்டணமாகிய $209, உடைமை வரியுடன் சேர்க்கப்பட்டிருந்தது. இது 2008 நவம்பர் 1ம் திகதி மாறும். உங்கள் திண்மக் கழிவு கையாள்கைக் கட்டணத்தை இம்மாநகரம் இனிமேல் ஒரு புதிய வழங்கீட்டுக் கட்டணச் சீட்டில் சேர்க்கும். கடந்த காலத்தில் உங்கள் உடைமை வரியுடன் சேர்ந்த சராசரிக் குப்பைக் கட்டணமாகிய $209, உங்கள் புதிய வழங்கீட்டுக் கட்டணச் சீட்டில் ஒரு தள்ளுபடியாக உங்களிடம் திரும்பத் தரப்பட்டு, உங்கள் புதிய கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும். உங்கள் நீர்க் கட்டணம் புதிய வழங்கீட்டுக் கட்டணச் சீட்டில் புறம்பான விடயமாக அமையும்.

ஒவ்வொரு வளவுக்கும் கொடுக்கப்படும் $209 தள்ளுபடி, புதிய கட்டணத்தில் கழிக்கப்பட்டுள்ளது (வலது புறம் உள்ள படத்தைப் பார்க்கவும்). இந்த ஆண்டில் புதிய நிகழ்வுத்திட்டங்கள் பலவற்றை இம்மாநகரம் கட்டம் கட்டமாகப் புகுத்தத் தொடங்கும். அவற்றுள் அடங்குபவை: மீள்பாவனைக்கு இடப்படும் கழிவுப் பொருட்களுள் புதியவற்றைச் சேர்த்தல், அடுக்குமாடிக் கட்டடங்களிலிருந்து சேதனக் கழிவு அகற்றல், மீள்பாவனை நிலையங்கள் திறத்தல், (தளபாடங்கள், மெத்தைகள் போன்று) நீடித்து நிலைக்கக்கூடிய பொருட்களைத் தெருவோரத்தில் இடுவித்து எடுத்துச்செல்லல்.

பொருட்களை நீங்கள் எவ்வளவுக்கு குறைக்கிறீர்களோ, மீளப் பயன்படுத்துகிறீர்களோ, மீள்பாவனைக்கு இடுகிறீர்களோ அவ்வளவுக்கு உங்கள் கழிவுப்பொருட்களும், கட்டணமும் குறையும் என்பதை நினைவில் வைத்திருக்கவும்.

**toronto.ca/target70**

## புதிய குப்பை கொள்கலம் இன்னும் கிடைக்கவில்லையா? இப்போதைக்கு உங்கள் குப்பைகொள் பைக்கு ஓர் இள்ஞசிவப்புக் கீற்றினைப் பயன்படுத்தவும்

மாநகரம் எங்கும் பல வீடுகளுக்கு புதிய குப்பை கொள்கலம் விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. திண்மக் கழிவு கையாள்கைக் கட்டணம் 2008 நவம்பர் 1ம் திகதி செல்லுபடியாகும். அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் தமக்கு விருப்பமான குப்பை கொள்கலத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். எனினும் 2009 தை

31ம் திகதிக்கு முன்னர் கொள்கலங்கள் வழங்கப்படும். அதுவரை சம்பந்தப்பட்ட மாநகரவாசிகள் தங்கள் குப்பைகொள் பைகளுக்கு, மாநகரத்தால் வழங்கப்படும் இளஞ்சிவப்புக் கீற்றினைப் பயன்படுத்துவார்கள். இளஞ்சிவப்புக் கீற்றினைப் பெற்றுக் கொள்ளும் வீடுகளுக்கும் புதிய வழங்கீட்டுக் கட்டணச் சீட்டு மூலம் கட்டணம் விதிக்கப்படும் என்பதைக் கவனிக்கவும்.

ஆள்-முகவரியிட்டு, கனடா அஞ்சல் துறை மூலம் அனுப்பி வைக்கப்படும் இளஞ்சிவப்புப் பைக் கீற்றுகள் 2008 நவம்பர் 1 முதல் 2009 தை 31 வரை செல்லுபடியாகும். நீங்கள் தேர்ந்தெடுத்த கொள்கலத்தின் பருப்பத்துக்கு ஏற்றளவு கீற்றுக்களையும், அவற்றைப் பயன்படுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்துரைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். மேலதிக விபரங்களுக்கு, பின்வரும் இணையத்தளத்தை நாடவும்: Toronto.ca/target70 or call 416-392-BINS (2467).

**அடுக்குமாடிக் கூடங்கள், சொந்த அடுக்குமாடிக் கூடங்கள், நிரைமனைகள்**

2008 யூலை 1 முதல் கட்டட உடைமையாளர்கள் திண்மக் கழிவு கையாள்கைக் கட்டணம் செலுத்த வேண்டியதாயிற்று. கட்டடவாசிகள் இடும் குப்பையின் தொகையைப் பொறுத்து கட்டட உடைமையாளர்களுக்கு கட்டணம் விதிக்கப்படுகிறது. கட்டடவாசிகள் மீள்பாவனைக்கு இடும் பொருட்கள் எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு குப்பை பெருகும். குப்பை பெருக, கட்டணமும் பெருகும்.

அடுக்குமாடிக் கட்டடவாசிகள் தமது கழிவுப்பொருட்களை மிகவும் எளிதில் மீள்பாவனைக்கு இடுவதற்கு ஏதுவாக இம்மாநகரம் கட்டட உடைமையாளர்களுக்கு உதவ முன்வந்துள்ளது. அடுக்குமாடிக் கட்டடங்களில் மீள்பாவனைக்கு இடும் வழமை கடுகதியில் 13 விழுக்காடு அதிகரித்தே ஆகவேண்டும்.

தற்பொழுது தனிவீடுகளில் கழிவுப்பொருட்களையும், சேதனக் கழிவுகளையும், உருப்படிகளையும் மீள்பாவனைக்கு இடுவதற்கு கட்டணம் இல்லை. அடுக்குமாடிக் கட்டடங்களிலும் அவ்வாறே.

## பிள்ளைகளின், குடும்பங்களின் உடல்நலம் ஓங்கத் துணைநிற்றல்

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் குடும்பம் பிறர் துணை நாடும். *உடல்நலம் வாய்ந்த குழந்தைகள், உடல்நலம் வாய்ந்த பிள்ளைகள்* (*Healthy Babies, Healthy Children*) என்னும் நிகழ்வுத்திட்டத்தின் மூலம் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை குடும்பங்களுக்கு உதவுகிறது.

இந்த உதவித் திட்டத்தின்படி பொது சுகாதாரத் தாதியாளர் ஒருவர் சம்பந்தப்பட்ட குடும்பத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, தேவை என்று கண்டால், வீடுதேடி வந்து உதவி புரிய விருப்பம் தெரிவிப்பார். ''ரொறன்ரோவாழ் பிள்ளைகள் அனைவரின் உடல்நலமும் மேலோங்குவதற்கு இந்நிகழ்வுத்திட்டம் ஏதுவாகும். இது, குழந்தை பிறப்பதற்கு முன்னர் ஆரம்பித்து, குழந்தை பிறந்து 6 வயது ஆகும்வரை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குத் துணைநின்று, முன்கூட்டியே செயற்பட்டு, உடல்நலக்கேட்டைத் தடுத்து, பணியாற்றும் நிகழ்வுத்திட்டம் ஆகும்'' என்று உடல்நலம் வாய்ந்த குடும்பங்கள் திட்டப் பணிப்பாளர் Donalda McCabe குறிப்பிட்டுள்ளார்.

பொது சுகாதாரத் தாதியாளர்களும் குடும்ப வீட்டுக்கு வருகை தருவோரும் குடும்பங்களுக்குத் துணைநின்று, உடல்நலம் கற்பித்து, சமூக சேவையகங்களுடன் தொடர்புபடுத்துவதில் ஒத்துழைப்பார்கள். குடும்ப வீட்டுக்கு வருகை தருவோர் புதுக்கத் தாயானவர்களின் சொந்த மொழியிலேயே உரையாடுவார்கள். ரொறன்ரோவில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை வியக்கத்தக்கது—ஒன்ராறியோவில் பிறக்கும் குழந்தைகளுள் பருமட்டாக 24 விழுக்காட்டினர் ரொறன்ரோவில் பிறக்கிறார்கள்! ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை எதிர்கொள்ளும் சவால்களுள் அது ஒன்று. கடந்த 8 ஆண்டுகளில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை புதுக்கத் தாயான 162,545 பேருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டது. அது மேற்கொண்ட வீட்டு வரவுகளின் எண்ணிக்கை: 69,310. மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்: 416-338-7600.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டி, அவர்கள் தமது வாழ்வை சிறந்த உடல்நலத்துடன் ஆரம்பிப்பதற்கு உதவும் பெண்களுக்குத் துணைநிற்பதில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையும் ரொறன்ரோ உணவகங்களும் ஒத்துழைத்து வருகின்றன. இம்மாநகரம் எங்கும் அமைந்துள்ள உணவகங்கள் அனைத்தும் தத்தம் சாளரங்களில் *தாய்ப்பாலூட்ட வசதிகொண்ட உணவகம்* என்னும் ஒட்டியை இட்டு பாலூட்டும் தாய்மாரையும் குடும்பங்களையும் ஈர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**toronto.ca/health/breastfeeding/friendlyrestaurants.htm**

**உங்கள் உடல்நலம் பேணவும் – தடுப்பூசி ஏற்றவும்**

உங்களையும் உங்கள் குடும்பத்தைம் ஈர்ப்புவலி, இளம்பிள்ளைவாதம், மூளைக்காய்ச்சல், குக்கல் போன்ற கடுமையான நோய்கள் எவையும் பீடியாது பாதுகாப்பதற்கு தடுப்பூசி ஏற்றுவதே சிறந்த வழி. நோய்களை உண்டாக்கும் பற்றுயிரிகளும், தொற்றுயிரிகளும் இன்னமும் எம்மிடையே உள்ளன. அண்மையில் ரொறன்ரோவில் சின்னமுத்தும், 2007ல் வட அமெரிக்கா எங்கும் கூகைக்கட்டும் பரவியமை அதனையே உணர்த்துகிறது. நீங்கள் இன்னும் தடுப்பூசி ஏற்றவில்லையா? தடுப்பூசி ஏற்றியோரைவிட, தடுப்பூசி ஏற்றாதவர்கள் நோய்வாய்ப்படும் ஆபத்து அதிகம் அல்லவா!

“உங்களுக்கு எத்தனை வயது என்றாலும் பரவாயில்லை, நீங்கள் ஒழுங்காகத் தடுப்பூசி ஏற்றி வருவது முக்கியம். இளம் பிள்ளைகளுக்கு பல்வேறு தடுப்பூசிகள் தொடர்ச்சியாக ஏற்றப்பட வேண்டும் என்று விதந்துரைக்கப்படுவது எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால், வயது வந்தவர்கள் 10 ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஈர்ப்புவலி, தொண்டைக் கரப்பான் தடுப்பூசி ஏற்றவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? அத்துடன், நீங்கள் உலகின் சில பாகங்களுக்குப் பயணம் செய்யப்போகிறீர்கள் என்றால், திட்டவட்டமான தடுப்பூசிகள் சிலவும் உங்களுக்கு விதந்துரைக்கப்படலாம்’’ என்று ரொறன்ரோ பொது சுகாதார இணை மருத்துவ அதிகாரி Dr. Barbara Yaffe குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் பயன்படுத்தப்படும் தடுப்பூசி மருந்துகள் மிகவும் பத்திரமான நவீன மருந்துகள் ஆகும். அவற்றால் பாரதூரமான பக்கவிளைவிகள் ஏற்படல் அரிது. ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை பல்வேறு இலவச தடுப்பூசி வகைகளை ஏற்ற முன்வந்துள்ளது. அவற்றுள் 7ம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்குமான ஈரல் அழற்சி (Hepatitis B), மூளைக்காய்ச்சல் (Meningitis C) தடுப்பூசிகள், 8ம் வகுப்பு மாணவிகள் அனைவருக்குமான மனித கழலைத் தொற்றுயிரி (Human Papiloma Virus) தடுப்பூசிகள், இலையுதிர் பருவந்தோறும் அரை வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்குமான சளிக்காய்ச்சல் (flu) தடுப்பூசிகள் அடங்கும்.

மேலதிக விபரங்களுக்கு, உங்கள் வைத்தியருடன் உசாவவும். அல்லது ரொறன்ரோ பொது சுகாதார தடுப்புமருந்து தகவல் இணைப்பை (Toronto Public Health Immunization Information Line) அழைக்கவும்: 416-392-1250.

**toronto.ca/health**
**416-392-1250**

ரொறன்ரோ மேலோங்கி வருகிறது, பெருவெற்றி ஈட்டி வருகிறது

ரொறன்ரோ மாநகரம் மேற்கொள்ளும் நிகழ்வுத்திட்டங்களையும், சேவைகளையும் மெச்சி அனைத்துநாட்டு அங்கீகாரமும், மாண்புறு விருதுகளும் கிடைத்த வண்ணம் உள்ளன. பொருளாதார மேம்பாடு, பத்திரமும் பாதுகாப்பும், வாழ்க்கைத் தரம், சேவைத் தரம் என்று எதனைக் கணித்தாலும், ஏனைய பெரிய உலக மாநகரங்களிடையே ரொறன்ரோ தொடர்ந்து மேலோங்கி வருகிறது.

பத்துக்கு மேற்பட்ட மத்திய, மாகாண, அனைத்துநாட்டு ஆய்வுகள், சுட்டெண்கள், அறிக்கைகளின்படி 2005ம் ஆண்டு முதல் ரொறன்ரோ ஓர் ஓங்கிய மாநகராமாக விளங்கி வந்துள்ளது. மிகவும் பொருளாதார வலுபடைத்த நியூ யோர்க், பாரிஸ், ஹாங்காங், தோக்கியோ, இலண்டன் போன்ற பெரிய பொருளாதார மாநகரங்களுள் ரொறன்ரோ 10வது நிலையில் உள்ளதாக அண்மையில் Forbes சஞ்சிகை அறிவித்தது. G7 எனப்படும் ஏழு பெரிய கைத்தொழில்மய நாடுகளுள் மிகவும் விரைந்து வளரும் நிதிய மாநகரங்களுள் ரொறன்ரோ அடங்குவதையும் Forbes சஞ்சிகை ஒப்புக்கொண்டுள்ளது. Standard & Poor's 2007 Industry Report Card முன்வைக்கும் தகவலின்படி உலகிலேயே மிகவும் பொருளாதார வலுபடைத்த 10 மாநகரங்களுள் ரொறன்ரோ ஒன்றாகும். S&P அறிக்கையில் உலகளாவிய முறையில் 15,000க்கு மேற்பட்ட உள்ளூர், மாநில, பிராந்திய ஆட்சிபீடங்கள் ஆராயப்பட்டன. திட்பமான சேவை, தீர்க்கமான பல்வகைமை என்பவற்றைப் பொறுத்தவரை இலண்டன், லாஸ் ஆஞ்சலிஸ், மிலான், மாஸ்கோ, நியூ யோர்க், பாரிஸ், யொக்கஹாமா போன்ற உலகத்தரம் படைத்த மாநகரங்களுள் ஒன்றாக ரொறன்ரோ அதில் இனம் காட்டப்பட்டுள்ளது.

"ரொறன்ரோ தொடர்ந்தும் உலகின் மகத்தான மாநகரங்களுடன் ஒருசேர இடம்பெறுவது, இம்மாநகரம் ஈயும் வாழ்க்கைத் தரத்தை மக்கள் பெரிதும் நாடுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. அந்த வகையில் பிற மாநகரங்களுக்கு இது ஒரு முன்மாதிரியாகவும் விளங்குகிறது" என்று மாநகராதிபதி டேவிட் மிலர் தெரிவித்துள்ளார்.

- KPMG-யின் 2006-ம் ஆண்டுக்கான மேம்பாட்டு மாற்றுவழி ஆய்வில் (KPMG's Competitive Alternatives study) உலகிலேயே மிகவும் ஆதாயமான தொழில்துறை, முதலீட்டுச் சூழ்நிலை காணப்படும் மாநகரங்களுள் ரொறன்ரோவும் ஒன்று என்பது கண்டறியப்பட்டுள்ளது.
- 2007 பங்குனி மாதம் மேற்கொள்ளப்பட்ட *வாய்ப்புவள மாநகரங்கள்: 21ம் ஆண்டுக்கான தொழில்துறை-தயார்நிலை சுட்டுகள்* (Cities of Opportunity: Business-Readiness Indicators for the 21st Century) என்னும் தலைப்புடன் கூடிய ஆய்வில் 11 உலக மாநகரங்களுடன் ரொறன்ரோ ஒப்பிடப்பட்டுள்ளது. ஆகுசெலவு, எளிதாகத் தொழில் துறையில் ஈடுபடும் வாய்ப்பு, குடிமக்கள் நிலை சார்ந்த அனுகூலங்கள், புதுமை படைத்தல், பத்திரமும் பாதுகாப்பும், வாழும் பாங்கு சார்ந்த நன்மைகள் என்பவற்றைப் பொறுத்தவரை தலைசிறந்த மாநகரங்களுள் ரொறன்ரோவும் ஒன்று என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- Economist Intelligence Unit (the Economist Magazine) ரொறன்ரோவில் குற்றச் செயல்கள் குறைவு, அரசியல் உறுதிப்பாடு குன்றும் ஆபத்து அல்லது பயங்கரவாத ஆபத்துக் குறைவு, மிகவும் விருத்தியடைந்த போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பு என்பவற்றைச் சான்றுகளாக முன்வைத்து, உலகில் வாழ்வளிக்கும் மாநகரங்களுள் ரொறன்ரோவை 5வது இடத்தில் இட்டுள்ளது.
- Mercer Human Resource Consulting உலகில் வாழ்க்கைத் தரம் மிகுந்த மாநகரங்களுள் ரொறன்ரோவை அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகளாக 15வது இடத்திலும், வட அமெரிக்காவில் 2வது இடத்திலும் இட்டுள்ளது.

- LaSalle Investment Management வகுத்த 2005ம் ஆண்டுக்கான வட அமெரிக்க பிராந்திய பொருளாதார வளர்ச்சிச் சுட்டெண்ணின்படி, ரொறன்ரோ வட அமெரிக்காவில் உச்சப் பொருளாதார வளம் படைத்த மாநகரம் என்று 2005 ஐப்பசி மாதம் அறிவிக்கப்பட்டது.
- ரொறன்ரோ மாநகர நெடுங்கால வருவாய்த் திட்டத்துக்கு 2006ல் அமெரிக்க-கனடிய அரசாங்க நிதி அதிகாரிகள் சங்கத்தின் (Government Finance Officers of the United States and Canada) அரசாங்க நிதி (வரவுசெலவுத்திட்டம் வகுத்தல், நிதி அறிக்கையிடல் வகை) விருது என்னும் மாண்புறு விருது கிடைத்தது.
- 2004 முதல் இம்மாநகரம் பொதுத் துறைச் சாதனைத் தர விழாவில் (Public Sector Quality Fair) 119 விருதுகளை வென்றுள்ளது. ஒன்ராறியோ எங்கும் நிருவாக, சுகாதார பராமரிப்பு, கல்வித் துறைகளில் ஆற்றப்படும் தலைசிறந்த சேவைகள் ஆண்டுதோறும் இந்த விழாவில் ஏற்றிப் போற்றப்படும். இந்த ஆண்டில் மாநகரத்தின் 45 நிகழ்வுத்திட்டங்களின் ஆக்கவளமும் தரமும் மெச்சப்பட்டமை ஒரு சாதனை ஆகும்.

## மாற்றம் வீசுகிறது

காலநிலை மாற்றம் தொடர்பாக ரொறன்ரோ ஆற்றிவரும் பணியை வெளிநாடுகள் ஏற்றுப் போற்றுகின்றன

காலநிலை மாற்றம், சூழல் தொடர்பான விடயங்களில் ரொறன்ரோ முன்னிலை வகிப்பதை உலகம் அறியும். ரொறன்ரோவை பசுமையும் நலமும் மிகுந்த மாநகரமாக மாற்றும் எண்ணத்துடன் மாநகரவாசிகளுடனும் தொழிலகங்களுடனும் மாநகராட்சி மன்றம் பல்லாண்டுகளாக நெருங்கிச் செயற்பட்டு வருகிறது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பாக இம்மாநகரம் கைக்கொள்ளும் நெடுங்கால அணுகுமுறை அதன் *மாற்றம் வீசுகிறது* (*Change is in the Air*) என்னும் நடவடிக்கைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

(1990ம் ஆண்டில் காணப்பட்ட நிலையின் அடிப்படையில்) புவிவெப்பவாயு வெளியேறுவதை 2012ம் ஆண்டுக்கு முன்னர் 6 விழுக்காடு குறைக்கும் இலக்கும், 2050ம் ஆண்டுக்கு முன்னர் 80 விழுக்காடு குறைக்கும் இலக்கும் *மாற்றம் வீசுகிறது* திட்டத்தில் குறிக்கப்பட்டள்ளன. குறித்த இலக்குகளை எய்துவதற்கு இம்மாநகரம் பூண்ட உறுதிக்கு, அதன் உறுதுணையுடன் மேற்கொள்ளப்படும் பல்வேறு சுற்றாடல் நடவடிக்கைகளும் நிகழ்வுத்திட்டங்களும் துணைநிற்கின்றன.

சுற்றாடல் குழுமங்களும், பசுமைநலம் உணர்ந்த ரொறன்ரோவாசிகளும் மாநகரத்தின் முயற்சிகளைப் பாராட்டியுள்ளார்கள். Janet McCausland என்னும் மாநகரவாசியிடம் கருத்துரைக்கும்படி கேட்டபொழுது, “ரொறன்ரோவை பசுமைப்படுத்தி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அரும்பாடுபடும் திட்டங்கள் மாநகரத்திடம் உண்டு என்பதில் ஐயமில்லை. மாநகரம் அதன் இலக்கை எய்தும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு” என்று தெரிவித்தார்.

Green Living Enterprises என்னும் நிறுவனத்தில் சுற்றாடல் உசாவலராக விளங்கும் மைக்கோஸ்லண்ட், “இந்த இலக்கை எய்துவதற்கு, மாநகர மண்டபத்தில் தீர்மானம் எடுப்பவர்கள் விடாப்பிடியாக, மனந்தளராது செயற்பட நேரும். உலகளாவிய முறையில் சிந்தித்து, ஊரளாவிய முறையில் செயற்படுக என்பது அடிபட்ட கூற்றாகத் தென்படலாம். எனினும் வேண்டியது அதுவே” என்றும் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மாநகராதிபதி டேவிட் மிலர் *40 மாநகரங்கள் குழுமத்தின்* (C40 Group) தலைவராக நியமிக்கப்பட்டார். அது காலநிலை மாற்றத்தை தடுக்க உறுதிபூண்ட பெரிய உலக மாநகரங்களின் கட்டுக்கோப்பு. இந்த நியமனத்தின் மூலம் ரொறன்ரோவின் பசுமைப் புகழ் மேலும் ஓங்கியது.

மாநகராட்சி மன்றத்தின் போக்குவரத்து ஊர்திகளைப் பசுமைப்படுத்தல், மாநகராட்சி மன்றத்தின் இயந்திர-சாதனங்களை குறைந்த எரிபொருள் கொண்டு மிகுந்த திறனுடன் செயற்பட வைத்தல், குப்பை தாழ்த்தும் புலத்தில் வெளிப்படும் சதுப்புநில வாயுவை (methane gas) எரிபொருளாகப் பயன்படுத்தல் போன்ற நிகழ்வுத்திட்டங்கள் மூலம் மாநகராட்சி மன்றம் தன் சொந்த அலுவல்களைப் பல்லாண்டுகளாகப் பசுமைப்படுத்தி வருகிறது. மக்கள் பரந்துவாழும் குறிச்சிகளுக்குப் புத்துயிரூட்டும் முயற்சியில் ஓர் அங்கமாக பழைய, உயரிய கட்டடங்களில் எரிபொருள் திறனையும், தரத்தையும் மேம்படுத்தும் முயற்சியில் மாநகரம் பங்கு வகிக்கிறது. *ரொறன்ரோ பசுமை வாழ்வு* (*Live Green Toronto*) என்னும் புதிய மாநகர முன்னெடுப்பை சமூகக் குழுமங்கள் பாராட்டி வருகின்றன. இந்நிகழ்வுத்திட்டத்தில் பங்குபற்ற அவை ஆசைப்படுகின்றன.

**toronto.ca/environment**

*ரொறன்ரோ பசுமை வாழ்வில்* பங்குபற்றவும்

*ரொறன்ரோ பசுமை வாழ்வுத்* திட்டத்தின் மூலம் காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கையை ரொறன்ரோ மாநகரம் ஒரு புதிய படிக்கு முன்னகர்த்தியுள்ளது. எரிபொருள் நுகர்வைக் குறைத்து, வளியைத் தூய்மைப்படுத்தி, காலநிலையைப் பாதுகாக்க உதவும்படி மாநகரவாசிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த ஆண்டில் மாநகரம் *ரொறன்ரோ பசுமை வாழ்வுத்* திட்டத்தைப் புகுத்தியது. முன்னின்று கைகொடுக்கும் உதவி, உறுதுணை மானியங்கள், பயன்படுத்த எளிதான இணையத்தளம் என்பன *ரொறன்ரோ பசுமை வாழ்வுத்* திட்டத்துள் அடங்கும்.

"உள்ளூர் சமூக குழுமங்கள் எரிபொருள் திறனைப் பெருக்கி, மீள்-எரிபொருள் உற்பத்தி செய்து, உள்ளூரில் பயிர் வளர்த்து, பமைக் கூரை அமைத்து, மரம் நாட்டி, நீர் பேணுவதில் உதவும் நோக்குடன் நாங்கள் *ரொறன்ரோ பசுமை வாழ்வு* மானியங்கள் வழங்கி வருகிறோம்" என்று ரொறன்ரோ மாநகராட்சி மன்ற சுற்றாடல் அலுவலக அதிகாரி Lawson Oates கூறுகிறார்.

மாநகரத்தால் அமர்த்தப்பட்ட "சமூக ஊக்குவிப்பாளர்கள்" ("community activators") பசுமை எண்ணங்களைச் செயற்படுத்துவதில் குறிச்சிகளுக்கும் சமூக குழுமங்களுக்கும், இலவசமாக முன்னின்று கைகொடுத்து உதவுவார்கள்.

தள்ளுபடிகள், உதவிக்குறிப்புகள், பசுமை வளங்களுக்கு இணைப்புகள், மாநகர, மாகாண. மத்திய சுற்றாடல் நிகழ்வுத்திட்டங்கள் என்பவற்றுக்கு *ரொறன்ரோ பசுமை வாழ்வு* இணையத்தளம் சிறந்தது. அதனை நாடுவதுடன் நிற்காது, ரோறன்ரோவை ஒரு பசுமை மாநகரமாக மாற்றுவதில் தொடர்ந்து பங்குபற்றி உதவவும்!

**toronto.ca/livegreen**

மாநகராதிபதியின் கோபுர புனரமைப்புத் திட்டம்

ரொறன்ரோ, கோபுரங்கள் மிகுந்த ஒரு மாநகரம். அவை மாநகரம் எங்கும் பரந்துள்ளன. பெரும்பாலான குறிச்சிகளை அவையே சிறப்பிக்கின்றன. மாநகர வசிப்பிடங்களுள் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு கோபுரங்களே. அவற்றில் இலட்சக் கணக்கான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனினும், அவற்றுள் பெரும்பாலானவற்றுக்கும், அங்கு வாழும் மக்களுக்கும் புத்துயிரூட்ட வேண்டியுள்ளது.

எனவேதான் மாநகராதிபதியின் கோபுர புனரமைப்பு (Mayor's Tower Renewal) திட்டத்தை ரொறன்ரோ மாநகரம் செயற்படுத்தி வருகிறது. கட்டம் கட்டமாக கட்டடங்களைச் செம்மைப்படுத்தல், சமூகத்துக்குப் புத்துயிரூட்டல், வரலாறு காணாத பசுமைத் திட்டம் என்பன அதனுள் அடங்கும். ரொறன்ரோ எங்கும் அமைந்துள்ள 1000க்கு மேற்பட்ட உயரிய குடியிருப்புக் கட்டடங்களில் எரிபொருள் பாவனைத் திறனை கடுகதியில் செம்மைப்படுத்தினால், மாநகராதிபதியின் கோபுர புனரமைப்புத் திட்டத்தின் மூலம் இம்மாநகரம் முழுவதும் புவிவெப்பவாயு வெளிப்படுவதை வெகுவாகக் குறைக்கலாம். கிளின்டன் காலநிலை முன்னெடுப்புடன் (Clinton Climate Initiative) மாநகரம் ஒத்துழைத்து வருகிறது. *40 மாநகரங்கள் குழுமத்தின்* தலைவராக மாநகராதிபதி செயற்பட்டு வருகிறார். அந்த வகையில் மாநகராதிபதியின் கோபுர புனரமைப்புத் திட்டம் உலகத்துக்கு வழிகாட்டும்.

அதேவேளை, மாநகராதிபதியின் கோபுர புனரமைப்புத் திட்டம், எரிபொருள் நுகர்வுக்கு அப்பாற்பட்டது. அதனால் பல்வேறு நன்மைகள் கிட்டும்:

- புவிவெப்பவாயு வெளிப்படுவது குறைவதால், ரொறன்ரோ தூய்மையும் பசுமையும் மிகுந்த மாநகரமாக மாறும், தாது-எரிய நுகர்வு இடம்பெறாத புதிய கட்டடங்கள் அமையும், பொது போக்குவரத்து சேவை மேம்படும், உந்துருளியாளர்-பாதசாரிகளுக்கான வசதிகள் கிட்டும், மற்றும் பிற பசுமை வேலைப்பாடுகள் இடம்பெறும்.
- உள்ளூர் வேலைவாய்ப்புகள் தோற்றுவிக்கப்படுவதன் மூலம் சமூகங்கள் மிகவும் வலுப்படும், உள்ளூர் உணவுப்பொருள் வகைகளும், சேவைகளும் கிடைப்பது பெருகும், உள்ளக, வெளிப்புற பொழுதுபோக்கு இடவசதிகள் மேம்படும், வேலைத்திட்டங்களை வகுப்பதிலும் செயற்படுத்துவதிலும் குடியிருப்பாளர்கள் பங்குபற்றுவர்.
- அமைவிடம், சமூக பாரம்பரியம் என்பவற்றில் நாட்டம் செலுத்தப்படுவதால் சமூக பண்பாட்டு நன்மைகள் அதிகரிக்கும், குறிச்சிகளில் அமைந்துள்ள கட்டடச் சூழலும் இயற்கைச் சூழலும் மேம்படும்.
- வளவில் வைத்து மேற்கொள்ளப்படும் சில்லறை விற்பனை, சேவைகள் மூலம் உள்ளூர் பொருளாதார செயற்பாடு ஓங்கும், பசுமைத் தொழினுட்பவியல் சந்தைக்கு வரும், புதிய வேலைவாய்ப்புகளும் தொழில்துறை வாய்ப்புகளும் பிறக்கும்.

மாநகராதிபதியின் கோபுர புனரமைப்புத் திட்டத்தின் குறிக்கோள்: செல்வங்கொழித்து, வாழ்வளிக்கும் பசுமை மிகுந்த மாநகரம் ஆகும். அந்த வகையில் மாநகரக் கட்டடங்கள் செம்மையுறும், சமூகத்துள் மீள்முதலீடு இடம்பெறும், பசுமைத் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும். அவை மாநகரத்தை உருமாற்றும்.

**towerrenewal.ca**

அதிகாரம், பணம், மதிப்பு

மத்திய, மாகாண அரசுகளுடன் உறவு பூண்பதில் மாநகரம் எதிர்கொள்ளும் சவால்களை இம்மூன்று சொற்களும் சுட்டிக்காட்டுகின்றன. மத்திய, மாகாண அரசுகளுடன் புதிய உறவு பூண்டு, வலிமை படைத்த எங்கள் மாநகரத்தையும், அதன் பொருளாதாரத்தையும் மேலும் வலுப்படுத்த மாநகராதிபதி டேவிட் மிலர் வாக்குறிதி அளித்துள்ளார்.

ரொறன்ரோ மாநகரம் அதன் சொந்த இலக்குகளைக் கருத்தில் கொண்டு, அது முதன்மைப்படுத்தவேண்டிய பணிகளை அதுவே நிர்ணயிப்பதற்குப் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டியுள்ளது. இயற்றும்பொழுது, கனடாவில் 6வது பெரிய ஆட்சிபீடமாக விளங்கும் ரெறன்ரோவின் தகுதிநிலை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ரொறன்ரோ மாநகரச் சட்டம் பரவலான அதிகாரங்களை ரொறன்ரோவுக்கு வழங்கியது. மாநகர சேவைகளை ஆற்றுவதற்கும், மாநகரவாசிகளுக்குப் பதில்கூறும் பொறுப்பை ஏற்று, மாநகர வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கும் வேண்டிய நெகிழ்வுடைமையை அது வழங்கியது.

தான் முதன்மைப்படுத்தவேண்டிய பணிகளை நிர்ணயிக்கும் அதிகாரம் கொண்ட இம்மாநகரத்துக்கு, அவற்றைக் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு, இப்பொழுது பணம் தேவைப்படுகிறது. மட்டுப்பட்ட அளவில் புதிய வரிகளை விதித்து வருவாய் தேடும் வல்லமையை ரொறன்ரோ மாநகரச் சட்டம் இம்மாநகரத்துக்கு வழங்கியது. ஆனாலும், அது தீர்வில் ஓர் அங்கம் மாத்திரமே. சமூக சேவைச் செலவுகளை இம்மாநகரத்திடம் பொறுப்பிப்பது தொடர்பாக எழும் வருவாய்ப் பிரச்சனைகளைத் தணிக்கும் வழிவகைகளைக் கண்டறிவதில் மாகாண அரசுடன் இம்மாநகரம் தொடர்ந்து ஒத்துழைத்து வருகிறது. தேசிய போக்குவரத்து இலக்குத்திட்டம் (National Transit Strategy) ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றும், பொருளாதாரத்துடன் சேர்ந்து மேலோங்கும் வருவாயில் ஒரு பங்கு தரப்பட வேண்டும் என்றும் மத்திய அரசிடம் இம்மாநகரம் வேண்டிக் கொண்டுள்ளது. கனடிய மாநகர கூட்டமைப்பும் (Federation of Canadian Municipalities), பெருமாநகராதிபதி குழுவும் (Big City Mayors' Caucus) இவ்விரு கோரிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளன.

மத்திய, மாகாண அரசுகள் ரொறன்ரோ சம்பந்தமான முடிபுகளை எடுக்கும் அமர்வுகளில் இம்மாநகரத்தை மதித்து, ஓர் இருக்கை ஒதுக்கித் தருமாறு அது வேண்டிக்கொண்டுள்ளது. 2008 ஜனவரி 15ம் திகதி ரொறன்ரோ-ஒன்ராறியோ ஒத்துழைப்பு-கலந்துசாவல் உடன்படிக்கை (Toronto-Ontario Co-operation and Consultation Agreement) ஒப்பமிடப்பட்டதுடன் அந்தக் களத்தில் வெற்றி ஈட்டப்பட்டது. மாநகர, மாகாண ஆட்சி மன்றங்கள் நெறிபிறழாது, முன்கூட்டியே தகவல் பரிமாறுவதற்கும், அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்வதற்கும், தொடர்ந்து கலந்துசாவுவதற்கும் இந்த உடன்படிக்கையில் வழிவகுக்கப்பட்டுள்ளது. மத்திய, மாகாண, மாநகர ஆட்சி மன்றங்களிடையே வேறு புரிந்துணர்வு உடன்பாடுகளும் ஒப்பமிடப்பட்டுள்ளன.

ரொறன்ரோவாழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய, மாகாண அரசுகளுடன் தொடர்ந்து ஒத்துழைப்பதே இம்மாநகரத்தின் நோக்கம்.

## ரொறன்ரோவில் அமைந்துள்ள தொழிலகங்களின் உடைமை வரி குறைப்பு

தொழிலக வரி செலுத்தும் பிரிவினரின் உடைமை வரியைக் குறைத்து தொழிலக மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான நெடுங்காலத் திட்டம் ஒன்றை மாநகரம் அங்கீகரித்துள்ளது.

2008ல், வணிகம்புரியும் பிரிவினரின் வரிவிகிதங்களைப் படிமுறைப்படுத்தி, சிறிய தொழிலகங்களுக்கு மாநகரம் துரித வரிக்குறைப்பு வழங்கத் தொடங்கியது. படிமுறைப்படுத்திய வரிவிகிதங்களின் பயனாக, சிறிய தொழிலகங்கள் அனைத்தும் மாநகரம் நிர்ணயித்த இலக்கினை நோக்கி 2015ம் ஆண்டுக்கு முன்னர் நகரும் எனவும், வணிகம்புரியும் தொழிலகங்கள் அனைத்தும் 2020ம் ஆண்டுக்கு முன்னர் நகரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2008ல் "எச்ச வணிக" ("Residual Commercial") உடைமை வரிப் பிரிவு ஒன்றை மாநகராட்சி மன்றம் தோற்றுவித்தது. சிறிய தொழிலகங்களும், "வணிக" உடைமை வரிப் பிரிவினுள் திட்டவட்டமாக அடங்காத பிற வணிக உடைமைகள் (பேரங்காடிகள், பெரிய அலுவலக கட்டடங்கள், ஊர்தி மடுவங்கள் வெற்றுக் காணிகள், பெரிய விளையாட்டுக் கூடங்கள்) அனைத்தும் இதனுள் அடங்கும். "எச்ச வணிக" உடைமைகளின் மதிப்பீட்டுப் பெறுமதியுள் முதலாவது பத்திலட்ச டாலருக்கு வரி குறைக்கப்படும். எஞ்சிய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு "வணிக" உடைமை விகித வரி விதிக்கப்படும். 2008ல் "எச்ச வணிக" உடைமை வரி 1.29 விழுக்காடு குறைந்துள்ளது. 2008ல் "கைத்தொழில்" உடைமை வரி 1.01 விழுக்காடு குறைந்துள்ளது.

ரொறன்ரோ மாநகரத்தில் வணிக கட்டுமானம் மேலோங்குவதற்கு மேற்படி நடவடிக்கைகள் துணைநின்றுள்ளன. 2008ல், முதல் 7 மாதங்களிலும் மொத்தமாக $310 கோடி ($3.1 billion) பெறுமதி வாய்ந்த கட்டட அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டன. பின்வரும் கட்டுமானங்கள் திட்டமிடப்பட்டுள்ளன:

- 2009ம், 2010ம் ஆண்டுகளில் அகநகரப் பகுதியுள் 4 பெரிய புதிய அலுவலகக் கட்டடங்களில் 36 இலட்சம் (3.6 million) சதுர அடி பரப்பளவில் முதல் தர (Class A) அலுவலக வசதி
- பெருவிடுதியக கட்டுமான முதலீடு: $240 கோடி ($2.4 billion)
- கேளிக்கை/பண்பாட்டு வேலைத்திட்ட முதலீடு: $140 கோடி ($1.4 billion)
- பெரிய மருத்துவ, கைத்தொழில் கட்டுமான முதலீடு: $100 கோடிக்கு மேல் (over $1 billion)

ரொறன்ரோவில் அமைந்துள்ள தொழிலகங்களின் வணிக வாடகையும் 2007ம், 2008ம் ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்தது. அதேவேளை அலுவலக, கைத்தொழில் வெற்றிட வெளிகள் குறைந்தன.

ரொறன்ரோவின் 2008ம் ஆண்டுக்கான இறுதி வரிக்கட்டணச் சீட்டுகள் வைகாசி மாதம் எல்லா உடைமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

**toronto.ca/taxes/property_tax/rate_reduction**

செப்டெம்பர் 1ம் திகதி செல்லுபடியான சொந்தப் பயண ஊர்தி வரி

மாநகரத்தின் புதிய சொந்தப் பயண ஊர்தி வரி (Personal Vehicle Tax) செப்டெம்பர் 1ம் திகதி செல்லுபடியானது. பயண ஊர்திக்கு அல்லது சொந்தப் பாவனைக்குப் பதியப்பட்ட மென் வணிக ஊர்திக்கு $60 வரியும், மேட்டார்-உந்துருளிக்கு அல்லது மோட்டார்மிதியுருளிக்கு $30 வரியும் விதிக்கப்படும். மாநகரவாசிகள் தமது வாகன இலக்கத் தகட்டு அனுமதியை இரண்டு ஆண்டுகளுக்குப் புதுப்பிப்பதற்கு இரு மடங்கு வரி செலுத்த வேண்டும்.

ரொறன்ரோ முகவரி கொண்டவர்கள் தமது வாகன இலக்கத் தகட்டு அனுமதியைப் புதுப்பிக்கும்பொழுது சொந்தப் பயண ஊர்தி வரி செலுத்த வேண்டும். உங்கள் வாகன உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு, நீங்கள் சொந்தப் பயண ஊர்தி வரி செலுத்த வேண்டும். கனடா சேவைத் துறையின் இணையத்தளம், அலுவற்கூடம், அஞ்சல் சேவை, சாரதி-வாகன உரிமம் வழங்கும் அலுவலகம் ஊடாக சொந்தப் பயண ஊர்தி வரி திரட்டப்படுகிறது.

**toronto.ca/taxes**
**416-338-4829**

மாநகரத்தில் பிடித்தமான அம்சம், பிடித்தமான சேவை

**றொறன்ரோவில் உங்களுக்குப் பிடித்தமான இடம் எதுவும் உண்டா? அதன் சிறப்பு என்ன?**
உந்துருளிச் சவாரிக்கு றொறன்ரோ தீவுகள் (Toronto Islands) சிறந்தவை. என் கள மதிய உணவுடன் நான் ஓடத்தில் ஏறி நாளைக் கழிக்கலாம். அகநகரக் கோபுரங்களின் மகத்தான காட்சியை செலவின்றிக் கண்டுகளிக்கலாம்.
**நீங்கள் சிறந்ததாகக் கருதும் மாநகர சேவை எதுவும் உண்டா?**
பச்சைக் கொள்கலங்கள் சிறந்தவை. அடுக்குமாடிக் கூடங்களுக்கான முன்னோடித் திட்டத்தின் ஓர் அங்கமாக எனது கட்டடத் தொகுதி அமைந்தள்ளது. பச்சைக் கொள்கல நிகழ்வுத்திட்டம் மிகவும் நலம் பயப்பது. நானும் எனது அறைக் கூட்டாளிகளும் ஒரு நாளில் ஒரு தடவையாவது எங்கள் குப்பையை வெளியே இட்டு வைக்க நேர்ந்தது. தற்பொழுது கிழமைக்கு ஒரு தடவையே அப்படிச் செய்கிறோம்.

*Jackie Maclennan, Church Street Village*

**றொறன்ரோவில் உங்களுக்குப் பிடித்தமான இடம் எதுவும் உண்டா? நீங்கள் சிறந்ததாகக் கருதும் மாநகர சேவை எதுவும் உண்டா? எங்களுக்கு எழுதவும்: ourtoronto@toronto.ca**

**தகவலும் அந்தரங்கமும்**
ஒன்றை ஒன்று முழுமைப்படுத்தும் உரிமைகள் இரண்டு

பற்பல சேவைகளை மாநகரம் மேற்கொண்டு வருகிறது. அச்சேவைகள் பற்றிய பல்வேறு தகவல்களை அது தன்னகத்தே கொண்டுள்ளது.

நாங்கள் திறந்தமனதுடன், வெளிப்படையாகப் பணியாற்ற உறுதி பூண்டுள்ளோம். பொதுமக்களுக்கு மாநகர விபரங்கள் இயன்றவரை கிடைப்பது, நாங்கள் பூண்ட உறுதிக்கு இன்றியமையாதது என்று நம்புகிறோம். இம்மாநகரம் தன்னகத்தே கொண்டுள்ள தகவல்களுள் பெரும்பாலானவை பொதுமக்களுக்குரிய பதிவுகளே. அவை மாநகர இணையத்தளங்களில் வழமையாகக் கிடைப்பவை. உரிய மாநகரப் பகுதியுடன் தொடர்புகொண்டு அவற்றைக் கேட்டும் பெற்றுக்கொள்ளலாம். மாநகரம் தன்னகத்தே கொண்டுள்ள தகவல்களின் ஒரு புறநோக்கு, மாநகர இணையத்தள பதிவு விபரக்கொத்தில் (Directory of Records) காணப்படுகிறது. பொதுமக்கள் தமக்கு வேண்டிய தகவல்களை இதமாகவும், இலகுவாகவும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக வழமையான விபரந்தரு முறைமைகள் அதில் இடம்பெற்றுள்ளன.

எனினும், மாநகரப் பதிவேடுகளில் இட்டு வைக்கப்பட்டுள்ள அந்தரங்கமான அல்லது தனியாளுக்குரிய தகவல்களை மாநகரம் கட்டிக் காக்க வேண்டியுள்ளதால், பொது மக்களுக்கு எல்லாத் தகவல்களும் உடனே கிடைக்கவும் மாட்டா, அவற்றைக் கண்டடையவும் முடியாது. தனியாளுக்குரிய அல்லது அந்தரங்க தகவலை நாடி வேண்டுகோள் விடுப்பதற்கு, தகவல் சுதந்திர வேண்டுகோள் முன்வைக்கப்பட வேண்டும்.

மாநகரப் பணியாளர்கள் அந்தரங்கம் காக்கும் விதிகளுக்கு அமைந்தொழுகுவதற்கு ஏதுவாக, மாநகரப் பகுதி ஒவ்வொன்றிலும் விரிவான பயிற்சித் திட்டங்களையும், முறைமை மீள்நோக்குகளையும் மாநகரம் மேற்கொண்டுள்ளது.

தகவல் நாடும் உரிமையும், அந்தரங்கம் நாடும் உரிமையும் பொதுமக்களுக்கு உண்டு. அவ்விரு உரிமைகளையும் மாநகரம் இயைபுபடுத்தி வருகிறது. தகவல் பெற வாய்ப்பளிப்பது, மக்களாட்சி முறைமையில் பங்குபற்ற வாய்ப்பளிப்பதாகும். அரசியல் வாதிகளும், மாநகரப் பணியாளர்களும் தாம் எந்த மக்களுக்குத் தொண்டாற்றுகிறார்களோ அந்த மக்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பை ஏற்க வாய்ப்பளிப்பதாகும். மாநகரப் பதிவேடுகளில் இட்டு வைக்கப்பட்டுள்ள தனியாளுக்குரிய தகவல்கள் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும், கட்டிக் காக்கப்படுவதற்கு அந்தரங்கம் வழிவகுக்கும்.

உங்கள் அன்றாட வாழ்வில் நீங்கள் ஈடுபடும் வேளையில், எத்தகைய தகவல்களை நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்பதை எங்கள் தாபன தகவல் - அந்தரங்க அலுவலகம் (Corporate Access and Privacy Office) அறிய விரும்புகிறது.

**toronto.ca/cap 416-392-9684**

**ரொறன்ரோ: அன்றும் இன்றும்**

கிங் வீதி–யங் வீதி வடகிழக்கு மூலை, வடக்கு நோக்கிய தோற்றம்

கிங் வீதி–யங் வீதி சந்தி என்றென்றும் மக்கள் நடமாட்டம் மிகுந்ததாகவே இருந்து வந்துள்ளது. 1912ம், 2008ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட இந்த ஒளிப்படங்கள் அதனைப் புலப்படுத்துகின்றன.
கிங் வீதியை ஊடறுத்து மின்பேருந்து தடங்கள் செல்வதை இரு ஒளிப்படங்களும் புலப்படுத்துகின்றன. 1912ம் ஆண்டிலும் யங் வீதிவரை ஒரு மின்பேருந்துப் பாதை அமைந்திருந்தது. 1954ம் ஆண்டு அதே இடத்தில் யங் சுரங்கத் தொடருந்து தடம் அமைக்கப்பட்டது.

**toronto.ca/archives**

## மாநகர மண்டபத்தில் முதியோர் குரல் ஒலிக்க வழிவகுத்தல்

*முதியோர்க்கு உதவும் முதியோர்* – ரொறன்ரோ மாநகர முதியோர் அரங்கத்தில் இடம்பெறும், 60 வயதுக்கு மேற்பட்ட, பல-குழும மக்களை ஊக்குவிப்பது அதுவே. 2004ல் தோற்றுவிக்கப்பட்ட இந்த அரங்கம் இம்மாநகர முதியோரின் நலம் நாடும் குரலாக ஒலித்து வருகிறது.

"முதியோர் தமக்குதவ நாம் உதவ விரும்புகிறோம். இளமையில் அலட்டிக்கொள்ளாத தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஆனால் இப்பொழுது நாங்கள் முதியோர் என்ற வகையில் எங்கள் குரல் ஒலிக்கவும், கேட்கவும் வேண்டும்" என்று முதியோர் அரங்கத்தின் இணைத்தலைவரும், 53 ஆண்டுக்கால ரொறன்ரோ வாசியுமாகிய Mildred Margulies முழங்கியுள்ளார். ரொறன்ரோ மாநகரத்தில் பெருகிவரும் முதியோருக்காக முதியோர் அரங்கம் ஓங்கிக் குரல் கொடுத்து வருகிறது.

முதியோர் அரங்கத்தின் அடுத்த இணைத்தலைவராகிய Neville Gordon 1965 முதல் ஸ்காபறோ/கிழக்கு ரொறன்ரோ பகுதியில் வாழ்ந்து வருகிறார். பட்டயக் கணக்காளராகப் பணியாற்றி, 1994ல் ஓய்வுபெற்றது முதல், ரொறன்ரோவாழ் முதியோருக்காக அவர் வாதாடி வந்துள்ளார். முதியோருக்கு கட்டுபடியாகத்தக்க போக்குவரத்துக் கட்டணம் விதிப்பது பற்றிய விடயங்களில் அவர் குரல் கொடுத்துள்ளார்.

"நாங்கள் அனைவரும் முதியோர் அரங்கத்தில் அங்கம் வகிப்பதால், ரொறன்ரோவாழ் முதியோருக்காக நாங்கள் ஒருமித்துக் குரல் எழுப்புந்தோறும், மாநகர அரசியல் முறைமையைக் கற்றறிய எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்து வந்துள்ளது" என்று அவர் கூறுகிறார்.

இந்த ஆண்டு கோடை பிறந்த வேளையில், முதியோர் அரங்க உறுப்பினர்களும் நண்பர்களும் ரொறன்ரோ முழுவதையும் சேர்ந்த ஏனைய முதியோருடன் கூடி, ஆடிப் பாடிக், கூத்தாடி மகிழ்ந்தார்கள். இது அப்படி ஒன்றும் கடினமான சங்கதி அல்ல!

மாநகர முதியோருக்கு நேரடியாக நன்மை அளிக்கும் 40க்கு மேற்பட்ட நிகழ்வுத் திட்டங்களையும், சேவைகளையும் மாநகரம் மேற்கொண்டு வருகிறது. அவற்றை ரொறன்ரோவாழ் முதியோர் அனைவருக்கும், குறிப்பாக புதிய குடிவரவாளர்களுக்கும், வலுகுறைந்தோருக்கும், பொருள்வளம் குன்றியோருக்கும் கிடைக்கச் செய்வதற்காகவே முதியோர் அரங்கம் தோற்றுவிக்கப்பட்டது. மேலதிக விபரங்களுக்கு ரொறன்ரோ முதியோர் அரங்கத்துடன் தொடர்புகொள்ளவும்: 416-392-8630.

**toronto.ca/seniors**

பசுமைக் குறிப்புகள்: பூச்செடிகளை உறங்க வைத்தல்

1. ஒவ்வொரு ரோசாச் செடியையும் சுற்றி, அதன் அடித்தண்டு மட்டத்திலிருந்து ஏறத்தாழ 8 அங்குல உயரத்துக்கு கூம்புருவில் மண் அணைக்கவும்.

2. Rhododendron, azalea செடிகளுக்கு கூடுகட்டி, சாக்குச் சுற்றவும். இலைகளிட்டு நீங்கங்களை நிரப்பவும். செடிக்கு இலைகள் காப்புறை ஆகும்.

3. என்றென்றும் பசுமை வாய்ந்த செடிகளுக்கு சாக்குச் சுற்றவும். அது அவற்றுக்கு காப்புறையாக அமையும். தெருவில் வீசப்படும் உப்பு செடியில் படுவதைத் தடுக்க அது உதவும்.

4. பூண்டுகளின் முனை மேல்நோக்கி இருக்கும்படி நாட்டவும்!

5. செப்டெம்பர் மாதத்திலேயே daffodil மற்றும் பிற சிறிய பூண்டுகளை நாட்டவும். அப்பொழுது அவற்றின் வேர் வளரத் தொடங்க வாய்ப்புக் கிட்டும். daffodil செடிகளை நிலமட்டத்திலிருந்து 8 முதல் 10 அங்குலம் வரை கிழே நாட்ட வேண்டும். பூண்டுகளை நிலமட்டத்திலிருந்து 4 அங்குலம் வரை கிழே நாட்ட வேண்டும். நாட்டிய பின்னர் பூண்டின் மேல்மட்ட மண்ணை கீழ்மட்ட மண்ணுடன் உறுதிபட ஒட்டும்படி அமுக்கி விடவும்.

6. நிலம் உறைந்து இறுகுவதற்கு முன்னர் எந்த வேளையிலும் tulip செடிகளை நடலாம். அவற்றை நிலமட்டத்திலிருந்து 8 முதல் 10 அங்குலம் வரை கிழே நாட்ட வேண்டும். குறிப்பு: அணில்கள் ஏறத்தாழ 6 அங்குலம் வரையே நிலத்தைக் கிண்டும். எனவே அதைவிட ஆழமாக நாட்டினால், கிண்டி எடுத்து உண்டி கொள்ளும் அணில்களிடமிருந்து அவற்றை நன்கு பாதுகாக்கலாம். எனினும், அவற்றை இன்னும் ஆழமாக நாட்டினால், அவை எதிர்பார்த்தவாறு வளர்வது தடைப்படலாம். அணில்கள் விடாப்பிடியாகக் கிண்டினால், பூண்டுகளை நாட்டி, அறுகோணக் கம்பிவலை இட்டு, மண் மூடவும்.

7. குளிர்காலத்தில் களிமண் சாடிகளை வெளியே விட்டு வைக்க வேண்டாம். அவை குளிரில் உறைந்து தெறிக்கவும், வெடிக்கவும் கூடும். அதனை விடுத்து, சிலிர்த்த தூரிகை கொண்டு, அவற்றில் படிந்த மண்ணை அகற்றி, ஊர்திக் கூடத்தில் அல்லது தோட்டக் கொட்டிலில், அல்லது காலநிலை கெடுதி விளைவிக்காத ஓரிடத்தில் அவற்றை இட்டு வைக்கவும்.

8. அக்டோபர் பிற்கூறில், உங்கள் தோட்டத்தில் கடைசியாக ஒரு தடவை களை எடுக்கவும். அப்படிச் செய்தால் இளவேனில் பருவத்தில் களை மீளும் வாய்ப்புக் குறைவு.

9. அக்டோபர் மாதத்தில், மூன்றாவது அல்லது நான்காவது கிழமையில் கடைசித் தடவையாகப் புல் வெட்டவும். குளிர்காலத்துக்கு முன்னர் புல் சற்று நீண்டு வளர வாய்ப்புக் கிடைத்தால், குளிர்காலத்துக்கு அது மிகவும் ஈடுகொடுக்கும்.

10. உங்கள் பல்லாண்டுச் செடிகள் அனைத்தையும் நீங்கள் முற்றிலும் நிலமட்டம் வரை வெட்டிக் குறுக்கத் தேவையில்லை.

**இளையோர்க்கு அனுகூலம்**

13 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளையோருக்கு ரொறன்ரோ மாநகரம் பற்பல போழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்களையும், விரும்பியவேளையில் வந்து விளையாடு வதற்கான வசதிகளையும், வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகிறது. புதியவர்களைச் சந்தித்து, நண்பர்களுடன் பொழுதுபோக்கி, வேலைதேடும் போட்டியில் வெல்வதற்கு இன்றியமையாத அடிப்படைத் திறன்களை ஈட்டிக்கொள்ளவும்.

“நாளைய தலைவர்களுக்குப் பயன்படும் அரிய திறன்களையும், உருப்படியான வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொள்வதில் அவர்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டி, அவர்களுக்கு நாங்கள் உதவ விரும்புகிறோம். ரொறன்ரோ மாநகராட்சி மன்றமே இம்மாநகரத்தில் மிகப்பெரிய வேலைவாய்ப்புத் தாபனம். அத்துடன், இளையோர் நாடும் துறைகளில் அவர்களைப் பயிற்றிப் பணியாற்றும் சமூக அமைப்புகள் பலவற்றுடன் அது கூடிச் செயற்பட்டு வருகிறது” என்று மாநகரளாவிய இளையோர் துறை பொழுதுபோக்குத் துறைஞர் Maxwayne Christy கூறியுள்ளார்.

ரொறன்ரோ கோட்ட-வன-பொழுதுபோக்குத் துறையிலும் (Toronto Parks, Forestry and Recreation) மற்றும் பிற அமைப்புகளிலும் உள்ள வேலைவாய்புகள் உட்பட மாநகர நிகழ்வுத்திட்டங்கள், சேவைகள், அவற்றைப் பெற்றுக்கொள்ளல் பற்றிய விபரங்களை இளையோர் வெளிக்களப் பணியாளர்கள் வழங்கி வருகிறார்கள்.

**ரொறன்ரோ முழுவதும் இடம்பெறும் இளையோர் நிகழ்வுத்திட்டங்களில் பங்குபற்றவும்**

- 13 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட வலுக்குறைந்த மற்றும் விசேட வசதிகள் தேவைப்படும் இளையோரின் சமூக, திறன் விருத்தியை மேம்படுத்தும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்ட வாய்ப்புகளை Adapted Programs/Integrated Services வழங்கி வருகிறது.
- கலையை ஆய்விட்டு, கலை ஊடாக வாழ்வு வெளிப்படுவதைக் கண்டறியவும்! காட்சிக் கலைகள், இசை, நாடகம், கைப்பணி, விசேட நாட்டப் பயிலரங்கு நிகழ்வுத்திட்டங்கள். இளையோர் புதிய, தற்போதைய திறன்களை ஈட்டுவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும் உதவும் நோக்குடன் ஆண்டு முழுவதும், மாநகரம் முழுவதும் நிகழ்வுத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- குழந்தை கவனிப்பு பயில்வோர்க்குச் சான்றிதழ் வழங்கப்படும். குழந்தை பேணல், உணவூட்டல், சிறார் விருத்தி, சிறார் பாதுகாப்பு, முதலுதவி, அவசர நடைமுறைகள் என்பவற்றை இளையோர்க்குப் புகட்டும் நிகழ்வுத்திட்டம் இது.
- அங்க அசைவின் வலுவில் திளைக்கவும். எல்வா வயதுப் பிரிவினரும் தமக்கு உகந்த உடலுறுதி, உடல்நல நிகழ்வுத்திட்டங்கள் மூலம் சுகாதாரம், உடல்நலம் நாடவும்.
- வரையறையற்ற சிறுமியர் (Girls Unlimited) என்பது ரொறன்ரோவில் வாழும் 13 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமியரிடையே உடற்செயற்பாடு, தலைமைத்துவ திறன்கள், வாழ்வுத் திறன்கள் என்பவற்றை மேம்படுத்தி, அவர்களுக்குத் துணைநிற்பதில் பங்கு வகிக்கும் திட்டம் ஆகும்.
- இளையோரிடம் இளையோர் செவிமடுப்பு (Hearing Every Youth through Youth) என்பது தொலைபேசி வாயிலான மதிஞராக விரும்பும் இளையோர்க்கான தொண்டர் பயிற்சித் திட்டம்.
- ரொறன்ரோ எங்கும் வாழும் சிறாருக்கும், இளையோருக்குமான படகோட்ட, வெளியுலா நிகழ்வுத்திட்டங்களை அகமாநகர வெளியுலா நிலையம் (Inner City Outtripping Centre) உருவாக்கியுள்ளது.

- இளையோர், வகுப்பக நடைமுறை அனுபவங்கள், தொண்டாற்றல் மூலம் பல்வேறு தலைமைத்துவப் பாணிகளை ஆய்விடுவதற்கு பயிலும் தலைவர் (Leader in Training) நிகழ்வுத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.
- Queerwest என்பது தன்பாற்சேர்க்கை நாடும் 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளையோரும், அவர்களுடைய கூட்டாளிகளும் செவ்வாய் மாலை சந்திக்கும் நிகழ்வுத்திட்டம்
- Remix Project என்பது நகரக் கலைகளில் ஈடுபட விரும்பும் இளையோருக்கு ஊடக, தொழிலக, படைப்புக் கலைத் திறன்களைக் கற்பிக்கும் நிகழ்வுத்திட்டம்.
- ஒன்ராறியோவின் மிகப்பெரிய விளையாட்டுக் கழகத்தில் சேர்ந்து விளையாடவும்! இளையோர், புதியவர்களைச் சந்தித்து, புதிய திறன்களை விருத்திசெய்து, நலம்பட, இயைந்து வாழும் பாணியை வகுப்பதற்கு மாநகரம் எங்கும் இடம்பெறும் உதைபந்தாட்டம் முதல் வளைகோற்பந்தாட்டம் வரையான பல்வேறு விளையாட்டு நிகழ்வுத்திட்டங்கள், வாய்ப்பளிக்கிறது.
- Stomp Urban Dance Competition/Showcase என்பது வெவ்வேறு பண்பாட்டுப் பின்புலம், வயது, பால் கொண்ட இளையோர் கூடி அளிக்கும் தரமுயர்ந்த நிகழ்ச்சி.
- Tobacco Don't Own Toronto (T-DOT) என்பது இளையோர் மேற்கொள்ளும் தலைமைத்துவ நிகழ்வுத்திட்டம். ரொறன்ரோவில் நிலவும் புகைத்தல் பிரச்சனையில் ஊடகங்கள் பலவற்றையும் நாட்டம் செலுத்த வைக்கும் திட்டம்.
- ரொறன்ரோ இளையோர் அவை (Toronto Youth Cabinet) என்பது ரொறன்ரோவை இன்னும் சிறந்த மாநகரமாக மாற்றுவதில் நாட்டம் கொண்ட இளையோர் அனைவரும் ஒன்றுகூடித் திறனாய்வில் ஈடுபடும் அவையாக விளங்குகிறது. இளையோரின் எண்ணங்களையும் ஆற்றலையும் மாநகர மண்டபத்துக்கு கொணர்வதற்காக இது 1998ல் தோற்றுவிக்கப்பட்டது. மாநகராட்சி மன்றத்துடனும், இளையோர் சமூகத்துடனும் அவை உறுப்பினர்கள் உறுதிவாய்ந்த உறவைப் பேணி வருகிறார்கள்.
- தலைமைத்துவ விருத்தி, திறனாய்வுச் சிந்தனைத் திறன்கள், வேலைசெய்தல் தயார்நிலைப் பயிற்சி என்பவற்றில் இளையோர் ஒத்துழைப்பு தலைமைத்துவ நிகழ்வுத்திட்டம் (Youth Co-operative Leadership Program) நாட்டம் செலுத்தி வருகிறது.
- 16 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும், தற்பொழுது பள்ளி செல்லாதவர்களாகவும், வேலையற்றவர்களாகவும், தமது இலக்குகளை எய்துவதற்குத் துணை தேவைப்படுவோராகவும் விளங்கும் ரொறன்ரோவாழ் இளையோருக்கு, ரொறன்ரோ இளையோர் வேலைவாய்ப்பு (Youth Employment Toronto) நிகழ்வுத்திட்டம் வெளிக்கள சேவை ஆற்றி வருகிறது.

**toronto.ca/parks**

**எங்களுடன் தொடர்புகொள்ளவும்**

**ஒரு மக்தான மாநகரத்தை ஒருங்கிணைந்து கட்டியெழுப்புவோம்**

*எங்கள் ரொறன்ரோ* கனடா அஞ்சல் சேவை மூலம் இம்மாநகர வீடுகள் அனைத்துக்கும் விநியோகிக்கப்படுகிறது. மாநகர இணையத்தளத்தில் முற்றிலும் PDF உருவிலும், ஒலிப் பதிவுருவிலும் இது கிடைக்கும் **(toronto.ca/ourtoronto)**. இணையத்தளத்தில் கீழ்க்கண்ட மொழிகளில் இதனை நீங்கள் வாசிக்கலாம். அல்லது எங்களுடன் தொடர்புகொண்டு, உங்கள் மொழியில் அச்சிட்ட பிரதியை நீங்கள் அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கட்புலன் குன்றியோருக்கான பிரதியை அல்லது பெரிய எழுத்தில் அமைந்த பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு, எங்களுடன் தொலைபேசி அல்லது அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்:

*Our Toronto*
City Hall
100 Queen Street West
7th Floor, West Tower
Toronto, ON M5H 2N2
ourtoronto@toronto.ca
416-338-0338